விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
- சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
- உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
- கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
208, Galle Road, Colombo - 06
077 755 4528
(286)

சங்கு 25
ஒலி 250 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 09 ஞாயிற்றுக்கிழமை (25.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### எல்லைதாண்டிய மீன்பிடி
## இந்திய மீனவர்கள் 11 பேர் பருத்தித்துறையில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ். பருத்தித்துறை கடற்பரப்புக்குள் ஒரு படகில் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களே நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறுகைதான 11 இந்திய மீனவர் 19

## குற்றவாளிகள் ஆளும் நாடாகவே இலங்கையை உலகம் பார்க்கிறது
### நாம் மாற்றத்தை ஏற்படுத்துவோம் – அநுர



(கொழும்பு)

நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் ஜனரஞ்சக அரசாங்கம் உருவாக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"இந்த நாட்டிற்கு மாற்றம் தேவை என்று மக்கள் கூறுகிறார்கள். 19

### சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை
## நிறைவேற்றத் துடிக்கிறார் – ரணில்
## அடியோடு வெறுக்கிறார் – சஜித்
### சூடுபிடிக்கிறது தேர்தல் களம்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் பிரசாரங்களின்போது சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு ஆதரவாக ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு எதிராக சஜித் பிரேமதாஸவும் கடும் பிரசாரம் செய்து வருகின்றனர்.



(19ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சியில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

ஏ9 வீதியில் கிளிநொச்சி இயக்கச்சி சந்தியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் பரந்தனைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்தை பிரஸ்தாப நபர் வீதியில் நின்று மறித்ததாகவும் பேருந்தின் நடத்துநர் சம்பந்தப்பட்ட நபரை வீதி ஓரமாக நிற்குமாறு கூறிய 19

### வ.மா.சபைக்குச் சொந்தமான
## 139 கட்டடங்கள் பயன்பாட்டில் இல்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்கு உரித்தான 139 கட்டிடங்கள் 02 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையான காலத்தில் இருந்து பாவனைக்குட் படுத்தப்படாமல் இருந்தமை அம்பலமாகியுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாண சபையில் பயன்படுத்தப்படாத கட்டடங்கள் பல உள்ள போதும் மாகாண பொதுச்சேவை 19

### மருதனார்மடத்தில்
## ஆட்டோ விபத்து; சிறுவன் பலி

(மருதனார்மடம்)

முச்சக்கரவண்டி ஒன்று தடம்புரண்டதனால் இரண்டு வயதுச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று மருதனார்மடத்தில் இடம்பெற்றுள்ளது.

சுன்னாகத்தில் இருந்து மருதனார் 19

## பன்றி கடித்ததில் பெண் உயிரிழப்பு
### நெடுந்தீவில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

பன்றி கடித்ததில் வயோதிபப் பெண்ஒருவர்நேற்று பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவு 15 19

## கருத்துக் கணிப்புக்களை நம்ப வேண்டாம்
### தேர்தல்கள் ஆணைக்குழு

5ஆம் பக்கம் பார்க்க

## மத, இன அரசியலை நான் ஒருபோதும் செய்ததில்லை
### ஜனாதிபதி ரணில்

16ஆம் பக்கம் பார்க்க

## இனவாதச் செயற்பாடுகளினால் நாடு ஒருபோதும் முன்னேறாது - சஜித்

(கண்டி)

இனவாதப் பிரிவினைகளுடன் செயற்பாட்டால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. தற்போது மோதலுடன் கூடிய அரசியல் யுகமே நாட்டில் நிலவுகிறது என ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கண்டி, அக்குரனை நகரில் நேற்று மாலை இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அவர் இதனைக் 19



## உள்ளூராட்சித் தேர்தல் அடுத்த வாரம் முடிவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அடுத்த வாரம் நடைபெறும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எட்டப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.


இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு உயர் நீதிமன்றம் சில தினங்களுக்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டுள்ளது. 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திரு. சண்முகம் சதீஸ்குமார்

(சீதா ஜுவல்லறி உரிமையாளர்)

No.1, நவீனசந்தை, சாவகச்சேரி.

மண்ணில் 1974.11.25

விண்ணில் 2021.08.25

மூன்றாண்டாகியதோ எம் ஒளிவிளக்கே
உமை இழந்து இன்று
ஈரவிழி காயவில்லை
இதயத்தால் நொந்து வாடுகின்றோம்
நித்தம் நித்தம் கனவுதனில்
நீங்கள் வந்து போவதனால்
சிறிது நெஞ்சாறி வாழுகின்றோம்
வேராக இருந்து எம்மை
விருட்சங்களாக்கிய உங்கள்
நேரான பண்புகளை நெஞ்சில் சுமந்தபடி
நீர்காட்டிய வழியில் நடக்கிறோம்
தீராது என்றும் உம் நினைவுகள்...
என்றும் உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

# ஐயாத்துரை சிவநேசன்



| அன்னை மடியில் | அம்பிகையின் அடியில் |
|---|---|
| 04.09.1949 | 26.07.2024 |

குடும்பத்தின் குல விளக்கே – எங்கள்
விழி நிகர்ந்த – பேருறவே
அன்பின் திருவுருவே – எமை
அணைத்துக் காத்த – எங்கள் திருவிளக்கே
வழியேதும் தெரியாமல் – நாம்
விழி மூடி அழுகின்றோம்
கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் – அப்பா
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
எந்நாளும் எம் மனதில் வாழ்வீர்கள் அப்பா
கைலாயம்பதி அடியில் நீங்கள் வாழ்க!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் நினைவாக இன்றைய தினம் அன்னாரின் இல்லத்திலும், புங்குடுதீவு கலட்டியம்பதி வரசித்தி விநாயகர் ஆலய அன்னதான மடத்திலும் மற்றும் சந்நிதியான் அன்னதான மடத்திலும் விசேட அன்னதான நிகழ்வுகள் இடம்பெறும்.

இல.37, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 071 789 6164

(1784)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TECHNICIAN
ORGANIC MORINGA PLANTATION
IYAKACHCHI

Self-motivated person with 2-3 years' hands-on experience in Industrial Electrical maintenance to join the Team maintaining the equipment in the plantation and the state-of-the-art processing factory located within the plantation situated at Iyakachchi, close to the A9 Highway in Kilinochchi District.

State-of-the-art-factory is to convert Organically grown Moringa Leaves into value-added products such as Organic Moringa Leaf Powder in sachets, Capsules, Tablets, Flakes and Moringa Tea with long shelf life.

Candidates residing within the Northern Province will be preferred.

TECHNICIAN

Qualifications:
- NCT Diploma in Electrical Engineering (NVQ IV/V) or equivalent.
- 2-3 years' experience as an industrial electrician
- Excellent organization skills and is a team player
- Exceptional Verbal & Written Communication skills

All applications to reach us within 10 days of this advertisement.

Hyrin herbals

hrdlk@isfindustries.com
Chief Executive Officer
HERITAGE AGRI (PVT) LTD
Valaiththoddam, Iyakkachchi,
Palai, Kilinochchi

QUICK ADS (C-2382)


# யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி மாதுரி சாதனை




வடமாகாணத்தில் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டி கடந்த ஒரு வாரமாக யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைப்பெற்று நேற்றுடன் முடிவடைந்தது.

நடந்து முடிந்த போட்டியில் செல்வி மாதுரி மகிந்தன் 200m ஓட்டப் போட்டியில் மாகாண ரீதியில் முதலாவது இடத்தையும் 400m ஓட்டப் போட்டியில் மாகாண மட்ட சாதனையை முறியடித்து புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

100m ஓட்டப் போட்டியிலும் முதலாவது இடத்தை பெற்றுயாழ்ப்பாணக் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவரின் பயிற்றுவிப்பாளராக ஜெகநாதலிங்கம் லக்ஷ்மன் செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஆண்களுக்கான 800 மீ. ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தை தட்டியது வவு. பூம்புகார் கண்ணகி வித்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சகிந்தன் தங்கப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சகிந்தன் தங்கப்பதக்கத்தையும் முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.லதுசன் வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லீம் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த என்.எம்.நவ்ரீன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (நி-90)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1954 . 01 . 24

மறைவு
2024 . 07 . 26



கடந்த 26.07.2024 அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர். மாரிமுத்து சரஸ்வதி

உழைப்பின் சிகரமாய் உண்மையின் உறைவிடமாய்
உறவுகளுக்காக வாழ்ந்தவரே! எம் குடும்ப வழிகாட்டியாக
எங்களுக்காகவே வாழ்ந்தவரே!
அழியாது என்றும் உம் நினைவுகள்.

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.08.2024) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் "நெல்லியடி முருக மூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில்" நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்)
(c-1041)

முருகன் கோவில் வீதி,
நெல்லியடி.

தகவல்:
குடும்பத்தினர்
(அழகர் பல்பொருள் வாணிபம் நெல்லியடி)



SENIOR PLANTATION EXECUTIVE
IYAKACHCHI FARM

We are part of ISF Group of companies established in 1977.

We have established an Organic Moringa Plantation with Modern Agricultural Practices to produce high-quality Organic Moringa Leaves to manufacture Moringa Powder, Moringa Leaf Flakes, Moringa powder Capsules & Tablets in a state of the art Food Processing Factory being commissioned in Iyakkachchi, Northern Sri Lanka.

We have an opening for a young energetic result-oriented Senior Plantation Executive with minimum 3 years of experience in Agriculture in Private sector willing to take new challenges with good communication skills.

The plantation is located at Iyakkachi, close to the A 9 highway.

SENIOR PLANTATION EXECUTIVE

Scope of Duties:
- Planning the daily activities of the farm, allocating work for frontline workers, collecting the daily output and reporting the daily output to the management.
- Proactive approach for achieving results.
- Focus on crop health, growth, yield, optimization & cost control
- Prepare and manage plans and schedule for efficient execution of work.
- Liaise with relevant authorities and other stakeholders to ensure the use of best practices

Qualifications:
- Diploma in Agriculture/ Farming or related field
- Minimum 3 years of experience in estate/farm management
- In-depth knowledge about agricultural products, especially in Moringa cultivation
- Good communication & presentation skills
- Age between 25-45

Candidates resides within the Northern Province are preferred.
All applications must reach us within 10 days of this advertisement.

QUICK ADS

Hyrin herbals

hrdlk@isfindustries.com
Chief Executive Officer
HERITAGE AGRI (PVT) LTD
Valaiththoddam, Iyakkachchi,
Palai, Kilinochchi


## சர்வதேச கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து) நடத்தும் 102 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா எதிர்வரும் 28 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறும். யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் க.மகாதேவன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆசிய பசுபிக் பிராந்திய சர்வதேச கூட்டுறவு இணைய இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபைப் பணிப்பாளர் ஜி.டி. சரத்வீரசிறி கலந்து சிறப்பிப்பார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக்கணிப்புக்களை நம்ப வேண்டாம்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல்

**(கொழும்பு)**

**எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பல்வேறு தரப்பினர் மேற்கொண்டுள்ள கருத்துக்கணிப்புகளை நம்பி ஏமாற வேண்டாம் என தேர்தல்கள் ஆணைக்குழு வாக்காளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதேவேளை, கருத்துக்கணிப்புக்களை வைத்து ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது கருத்தை வாக்காளர்கள் மாற்ற வேண்டிய அவசியமில்லை என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத் நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

## பேராயரை சந்தித்தார் விஜேயதாஸ



(கொழும்பு) ஜனாதிபதி வேட்பாளர் விஜேயதாஸ ராஜபக்ஷ பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு பேராயர் இல்லத்தில் இடம்பெற்றது. இதன் போது உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கான நீதியை வழங்கும் பொருட்டு தன்னால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர் விஜேயதாஸ பேராயருக்கு விளக்கமளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான நீதியை பெற்றுக் கொடுக்க தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் பேராயரிடம் தெரிவித்தார். (நி)


களஞ்சிய சாலை தேவை
யாழ் மாவட்டம்
சாவகச்சேரி / கொடிகாமம்

யாழ்ப்பாணத்தில் மேற் குறிப்பிட்ட பகுதிகளில் உணவு பொருட்கள் களஞ்சிய சாலை தேவை.

- 4000 – 5000 சதுர அடி பரப்பு
- வாடகைக்கு அல்லது குத்தகைக்கு
- 40 அடி கொள்கலன் வாகனத்தை போக்குவரத்து செய்வதற்கான இட வசதி.

மேலதிக விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Tel: 0776041616 Email: land377740@gmail.com
21R/8, Dabare Mawatha, Narahenpita, Colombo 5

(சி-2380)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி-2379)

# அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை 24 சதவீதத்தால் நாமும் அதிகரிப்போம்

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சஜித்



(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்கள் நாட்டுக்கு சுமை என்று இதுவரை காலமும் கூறி வந்த அரசாங்கம் தற்போது அவர்கள் மீது கரிசணை காட்டுகின்றது. இது முற்று முழுதாக சந்தர்ப்பவாதமாகும்.

அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை 24 சதவீதத்தால் நாமும் அதிகரிப்போம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கேகாலை மாவட்டம், வரகாப்பொல தொகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், தமது பதவிகளை தக்க வைத்துக் கொள்வதற்காக அரச உத்தியோகத்தர்களை ஏமாற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் அரசு சேவை பயனற்றது என்றும் அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றும் அவர்கள் நாட்டிற்கு சுமை என்றும் கூறினார்கள். ஆனால் இன்று அதே நபர்கள் போலியான வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். நாம் அவ்வாறு போலியான வாக்குறுதிகளை வழங்க மாட்டோம். கூறும் அனைத்தையும் நடைமுறையில் செய்து காட்டுவோம்.

எமது ஆட்சியில் வாழ்க்கை செலவுக்கு சமமாக அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் திருத் தங்களை மேற்கொள்வதற்கான பிரத்தியேகக் குழு ஒன்று நியமிக் கப்படும்.

2025 ஜனவரி முதல் சகல அரச உத்தியோகத்தர்கள் அடிப்படை சம்பளமும் 24 சதவீதத்தால் அதிகரிக் கப்படும். தற்போது அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் ஆகக்குறைந்த 17 500 ரூபாய் வாழ்க்கை செலவு கொடுப்பனவானது 25 000 ரூபாய் வரை அதிகரிக்கப்படும்.

அதற்கமைய சகல கொடுப்பனவுகளும் உள்ளடங்களாக அரச உத்தியோகத்தர்களுக்கு ஆகக் குறைந்த மாத சம்பளமாக 57 500 ரூபாவை வழங்க நடவடிக்கை எடுப்போம். தற்போது நடைமுறையில் உள்ள 6 - 36 சதவீத வருமான வரியை 1 - 24 சதவீத வீதம் வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி)


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 17 - 07 - 1957 |  | 23 - 08 - 2024 |

## நாகரத்தினம் தனபாலசிங்கம் (திரவியம்)

(ஓய்வு பெற்ற அதிபர் - யா/வட்டு இந்துக்கல்லூரி)

தெல்லிப்பளை-பன்னாலையை பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் வீதி-யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் தனபாலசிங்கம் (திரவியம்) அவர்கள் 23.08.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம்-சின்னத்தங்கச்சி தம்பதியினரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம்-சிதம்பரநாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், சுமதி (முன்னைய பணிப்பாளர்- இதம் அரச சார்பற்ற நிறுவனம்) அவர்களின் பாசமிகு கணவரும், சஜனி (வைத்தியர்-தெல்லிப்பழை ஆதார வைத்தியாசலை), கோபிராஜ் (பொறியியலாளார்-கட்டார்), உமேஷ் (இறுதியாண்டு பொறியியற் பீட மாணவன்-CINEC) ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்-புனித பரியோவான் கல்லூரி), திருபாலசிங்கம் (இளவாலை) மற்றும் காலஞ்சென்ற குணபாலசிங்கம் (சட்டத்தரணி)ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வலட்சுமி, அருள்நாயகி, தனலட்சுமி, சுரேஷ் சுரேந்திரன் (லண்டன்), கிளிப் ராஜன் (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும், துஷீபன் (வைத்தியர்-யாழ் போதனா வைத்தியசாலை) இன் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.08.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

39/1, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(1777)

தகவல்: குடும்பத்தினர்
077 406 3321, 077 404 9383.



# மரண அறிவித்தல்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1948 - 07 - 23 |  | 2024 - 08 - 22 |

## கந்தசாமி செல்வரத்தினம்

அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் புலோப்பளை பளையை வதிவிடமாகவும், கேணியடி கொக்குவில் மேற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி செல்வரத்தினம் அவர்கள் 22.08.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சங்கரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி இளையதம்பி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் பாசமிகு மனைவியும் நிமலமோகன் (இத்தாலி), காலஞ்சென்ற நிமலநாதன், நிமலசோதி, நிமலதேவி, நிமலவதனி(சுவிஸ்), நிமலரஞ்சி(லண்டன்), நிமலச்செல்வி(நியூஸ்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் பேபி, மாணிக்கவாசகர், ஸ்ரீஸ்கந்தராசா, ஆனந்தராசா, ஸ்ரீதர், நிசாந் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, மல்லிகாதேவி, செல்வராணி மற்றும் பரிமளம் ஆகியோரின் சகோதரியும் செல்லம்மா, ராசம்மா, காலஞ்சென்றவர்களான செல்வராசா, கனகரத்தினம் மற்றும் தருமலிங்கம், தியாகராசா, இராசேந்திரம், வேலாயுதபிள்ளை, சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் நிருஷன், நிவேதன், லஜீவன், லக்ஷாயினி, வஜீகரன், நர்த்தனா, திவ்வியா, பேபிஷா, அக்ஷயா, வேனுஜா, விஸ்னுஜா, லானுஜா, அபிசா, திசாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.08.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது புலோப்பளை இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோப்பளை பொற்பத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புலோப்பளை, பளை.

(c-1039)

தகவல்: குடும்பத்தினர்



unicef | for every child
සෑම දරුවෙක් වෙනුවෙන්ම
ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்

**REQUEST FOR EXPRESSION OF INTEREST (EOI)**

**REGISTRATION OF FEMALE LED ORGANIZATIONS FOR SUPPLY OF GOODS AND SERVICES FOR REGULAR PROGRAM AND EMERGENCY SUPPLIES.**

United Nations Children's Fund (UNICEF) has long embraced and prioritized gender equality and women's and girls' empowerment not only as core principles and practices, but as essential to the realization of the human rights and social development. UNICEF established its first Gender Policy in 2010, as the global community was advancing a more progressive normative framework around gender equality and the empowerment of girls and women. UNICEF believes that both the achievement of gender equality and the empowerment of all girls and women are paramount in their own right, as well as essential contributors to, and central elements of, inclusive and sustainable development and our vision of a more equitable world. Women-owned/led businesses contribute significantly to the world economy, generating millions of new employment opportunities and spurring local development. But their full economic potential remains largely untapped or underutilized.

In this connection UNICEF Sri Lanka wishes to create a database of suppliers whose organizations are led by females to ensure equal and fair opportunities for those organizations to participate in procurement activities of UNICEF and other UN agencies in Sri Lanka. UNICEF is creating this database on behalf of all UN agencies in Sri Lanka for their use as part of the UN Joint Procurement Team's terms of reference for promoting female led businesses through UN Business Operations Strategy. Therefore UNICEF, Sri Lanka Country Office invites EoIs from qualified and experienced institutions led by women to register as potential suppliers of goods and services to UNICEF and other UN agencies for the regular programs as well as emergency responses.

**Required expertise, experience, and capacity.**

- Expertise – Any type of goods or services
- Should be a legal entity registered in Sri Lanka.
- At least 5 years of experience in the respective trade.
- Female representation as owner/entrepreneur, partner, chairman, managing director or any other leadership position controlling the whole organization is a must.

Interested institutions are requested to follow the below steps to make their submission.

1. Register their business in the United Nations Global Marketplace (UNGM). Guidance for registration in UNGM can be found in **https://help.ungm.org/hc/en-us/artiles/360012810860-How-to-register-as-a-supplier-on-UNGM**
2. Complete the online form by scanning the QR code below. You will need to upload documentary proof of female leadership to a public shared drive such as google drive and share the link in the form. More details and instructions will be available in the form itself.

**Please make your submission on or before 30th September 2024. The form will be blocked after this date.**

**Please note:**

- We do NOT require any prices at this stage; we seek only your expression of interest for inclusion in the database.
- A response to this Request for Expression of Interest does not automatically ensure that you will be awarded any purchase orders or contracts. Responses will used to select suppliers for tenders and will be carefully reviewed, hence please ensure to provide accurate information in the EOI.
- For any technical clarifcations, you may contact the following staff via email: **nwickramasinghe@unicef.org or pulinda.perera@undp.org**

(c-2378)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 456

Viber 076 636 3378



## தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்கள்

# சிங்கள மக்களை திசை திருப்பும் கருவி

**“ வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்களை கொத்து கொத்தாய் கொன்றழித்து விட்டு, தமிழினத்துக்கு எதிரான கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் பேசி, அதிகாரத்தை கைப்பற்றத் துடிப்பவர்களை சிங்கள மக்கள் நிராகரிக்க வேண்டும்**




தெற்கு அரசியல் தலைமைகளை நம்பி ஏமாந்து போவது தமிழினத்துக்கு தோசம் ஆகிவிட்டது.

காலம் காலமாக அவர்கள் எமக்கு வாக்குறுதிகளை தந்து எம்மை ஏணிப்படியாய் பாவித்து விட்டு ஏறி வந்த ஏணியை எட்டி உதைக்கும் செயல் நடந்த வண்ணமே இருக்கிறது.

இதில் இவர், அவர் என்ற பேதமேதுமில்லை. பெரும்பான்மை சிங்களத் தலைவர்கள் அனைவருமே தமிழ் மக்களை நம்ப வைத்து கழுத்தறுத்தவர்களே.

ஆயினும் அளவுகளில் ஆளாளுக்கு வேறுபட்டிருக்குமே தவிர ஏமாற்றியது என்பது முற்று முழுதான உண்மை.

தமிழ் மக்களின் ஆதரவை பெறுவதற்கு அவர்கள் தமிழ்த் தலைவர்களை தம் பக்கம் இழுக்கும் கைங்கரியத்தை கச்சிதமாய் அரங்கேற்றினர்.

இங்குதான் தமிழ் தலைமைகள் தொடர்ந்து ஒரே பிழையினை விடத் தலைப்பட்டனர். ஏமாற்றுகிறார்கள் என்று தெரிந்தும் அவர்களின் வாய்ப்பேச்சை நம்பி அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்க, அந்த ஆதரவை ஆதாரமாகக் கொண்டு ஆட்சிக்கு வந்தவுடன் வாக்குறுதிகளை குப்பைத் தொட்டியில் போடுவதை வழமையாக்கி கொண்டனர் சிங்களப் பெருந்தலைவர்கள்.

ஒரு முறை இரு முறை அல்ல பலமுறை இவ்வாறு நடந்து முடிய அது சுணைக்கெட்டதனத்தை தமிழ் தலைமையிடம் ஏற்படுத்தி விட்டது.

அந்த சுணைக்கேட்டை தமது அரசியல் ஆதாயங்களுக்காய் பயன்படுத்தும் கருவியாக பயன்படுத்திக் கொண்டனர் தமிழ் அரசியல்வாதிகள்.

கட்சியின் முடிவு, தமிழ் மக்களின் நலன் என்பதை கடந்து தமது சுய நலன்களின் மேலான்மைக்காக “நான் உங்களுக்கு ஆதரவு” என்ற தனிப்பட்ட கருத்தை பெரும்பான்மை ஆட்சியாளர்களுக்கு வழங்கி, அற்பசொற்ப சலுகைகளினூடே சுகபோக வாழ்க்கை வாழலாம் என்ற எண்ணத்தை நோக்கமாகக் கொண்டவர்கள் இருக்கும் வரை தமிழினத்துக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் களத்தில் பல்வேறு வேட்பாளர்கள் பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதில் யதார்த்தத்தை பேசுகின்ற வேட்பாளர்கள் இருக்கவே செய்கின்றனர். ஆயினும் அவர்களின் பேச்சு எடுபடப் போவதில்லை என்பதனால் இது தொடர்பில் இவ்விடத்தில் பேசிப் பயனில்லை. நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் 13 ஆம் திருத்தச் சட்ட மூலம் மிக முக்கியத்துவம் பெற்று நிற்கிறது.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவேன் என்று தனது தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

13 ஆவது திருத்தச் சட்ட மூல அமுலாக்கல், என்பது சிங்கள மக்கள் மத்தியில் எவ்வாறு புரிதலுக்குரியது என்பதை உணர முடியவில்லையாயினும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை திசை திருப்ப ஜனாதிபதி வேட்பாளர் பலர் முற்படுகின்றனர்.

இதில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ முன்னிலை பெற்று நிற்பதை காணக்கூடியதாக உள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ பிரிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு ஒரு நாளும் ஒன்றிணையக் கூடாது எனவும் அதிகாரப் பகிர்வுக்கு இடமேதுமில்லை எனவும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என்றும் தெரிவித்து இருக்கின்றார்.

தமிழினத்தின் வரலாற்று தொன்மையுடைய வடக்கு-கிழக்கை பிரித்து தமிழினத்தின் பலத்தைக் குறைக்கும் சூழ்ச்சி பெரும்பான்மைக்கு கிடைத்த வெற்றியே. இனி ஒரு போதும் வடக்கு-கிழக்கு இணைவு என்பது சாத்தியப்படக் கூடிய ஒன்றல்ல.

அதிகாரப் பகிர்வு என்பதை பெரும்பான்மையினர் இம்மியும் விரும்புவதாய் தெரியவில்லை. காலம் காலமாக ஆண்டான் அடிமை நிலையினையே விரும்புகிறார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்தினால் அதில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தமிழினத்துக்கு கிடைத்து விடும். அவ்வாறு அதிகாரங்களை வழங்கினால் தமிழினத்தை அடக்கவோ, தமிழினத்தின் வளங்களை சுரண்டவோ முடியாது என்ற கீழ்மைத்தனமான சிந்தனை பெரும்பான்மை ஆட்சியாளர்களிடம் பிரிக்க முடியாத ஒட்டுண்ணியாக ஒட்டிக் கிடக்கிறது.

தமிழினத்தின் இன்றைய இயலாமை நிலைக்கு ராஜபக்ஷக்களின் ஆட்சியே மூல காரணமாய் திகழ்ந்து நிற்கிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழினத்தை கொத்துக் கொத்தாய் கொன்றொழித்த பெருமை அவர்களையே சாரும்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை விதைத்து அதனூடாக சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்து விடத் துடிப்பவர்களை சிங்கள மக்கள் நிராகரிக்க வேண்டும். இல்லையேல் அது மீண்டும் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓட வழி வகுத்து விடும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**படம் : தர்மயுத்தம்**
**இசை: இளையராஜா**
**பாடல்: வல்லபன்**
**பாடியவர்: மலேசியா வாசுதேவன், எஸ்.ஜானகி**



ஆகாய கங்கை பூந்தேன் மலர் சூடி
பொன்மான் விழி தேடி
மேடை கட்டி மேளம் தட்டி
பாடுதே மங்களம் நாடுதே சங்கமம்

குங்குமத் தேரில் நான் தேடிய தேவன்
சீதா புகழ் ராமன்
தாளம் தொட்டு ராகம் தொட்டு
பாடுவான் மங்களம் நாடுவான் சங்கமம்

காதல் நெஞ்சில்..ஹே ஹே ஹே ஹே
மேள தாளம்..ஓஓஒஒ
காதல் நெஞ்சில்..ஹே ஹே ஹே ஹே
மேள தாளம்..ஓஓஒஒ
காலை வேளை பாடும் பூபாளம்
மன்னா இனி... உன் தோளிலே...
படரும் கொடி நானே
பருவப் பூ தானே
பூ மஞ்சம் உன் மேனி எந்நாளில் அரங்கேறுமோ

குங்குமத் தேரில் நான் தேடிய தேவன்
சீதா புகழ் ராமன்
மேடை கட்டி மேளம் தட்டி
பாடுவான் மங்களம் நாடுவான் சங்கமம்

தேவை யாவும் ஹே ஹே ஹே ஹே
தீர்ந்த பின்னும் ஓஓஒஒ
தேவை யாவும் ஹே ஹே ஹே
தீர்ந்த பின்னும் ஓஓஒஒ
பூவை நெஞ்சில் நாணம் போராடும்

ஊர்கூடியே உறவானதும்
தருவேன் பலநூறு
பருகக் கனிச்சாறு
தளிராடும் என் மேனி தாங்காது உன் மோகம்

ஆகாய கங்கை பூந்தேன் மலர் சூடி
பொன்மான் விழி தேடி
தாளம் தொட்டு ராகம் தொட்டு
பாடுவான் மங்களம் நாடுவான் சங்கமம்

# ரஷ்யாவை திருப்பி அடிக்கும் உக்ரைன்

**ரஷ்யாவின் எல்லைப் பிராந்தியமான கூர்ஸ்க்குள் தாக்குதல் நடத்தி உள் நுழைந்த உக்ரைன் படையினர், அதிக எதிர்ப்பு இல்லாமல் தொடர்ந்து முன்னேறிவருகிறார்கள்.**

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே ஆண்டுகள் கடந்து போர் நீடித்து வருகிறது. ஆரம்பத்தில் பலத்த அடி வாங்கிய உக்ரைன், தற்போது ரஷ்யா மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியிருக்கிறது. ரஷ்யாவின் முக்கிய இலக்குகளைக் குறிவைத்து ஆளில்லா விமானங்கள் மூலமாகவும், ஏவுகணைகள் மூலமாகவும் உக்ரைன் தாக்குதல் நடத்தி வருகிறது.



ரஷ்யாவின் எல்லையில் ரஸ்தோ என்ற இடத்தில் விமானம் மூலமாக குண்டுவீசி தாக்குதல் நடத்தியது உக்ரைன். அதில், 10இற்கும் மேற்பட்ட ரஷ்ய வீரர்கள் உயிரிழந்தனர். உக்ரைன் படைகள் தற்போது குர்ஸ்க் என்ற பகுதியைத் தாக்கி வருகிறார்கள்.

இதற்கு அமெரிக்காவிடமிருந்து பெற்ற ஹிமர்ஸ் என்ற ஏவுகணையை உக்ரைன் பயன்படுத்திவருகிறது. அதன் மூலமாக, ரஷ்யாவில் முக்கியமான பாலம் ஒன்றை உக்ரைன் தாக்குதல் நடத்தி தகர்த்திருக்கிறது. உக்ரைன் விமானப்படை தளபதி வெளியிட்டிருக்கும் வீடியோ ஒன்றில், சீயம் ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கும் பாலத்தின் மீது தாக்குதல் நடத்தப்படும் காட்சி இடம் பெற்றிருக்கிறது. இந்தப் பாலத்தின் மீது உக்ரைன் படைகள் ஏற்கெனவே நடத்திய தாக்குதல் தோல்வியடைந்த நிலையில் அமெரிக்காவிடமிருந்து பெற்ற ஏவுகணை மூலமாக நடத்திய தாக்குதலில் பாலம் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது.

ரஷ்யப் படைகளுக்கு இந்தப் பாலம் பெரிதும் பயன்பட்டுவந்த நிலையில், அதைக் குறிவைத்து உக்ரைன் அழித்திருக்கிறது. குர்ஸ்க் பிராந்தியத்தில் தங்களுடைய படைகளை பலப்படுத்துவதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்திருக்கிறார்.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ரஷ்யா - உக்ரைன் இடையே போர் தொடங்கியது. முதன் முறையாக இப்போது தான் ரஷ்யாவுக்குள் உக்ரைன் இவ்வளவு தூரம் நுழைந்து தாக்குதல் நடத்திவருகிறது. உக்ரைனின் இந்தத் தாக்குதல் நடவடிக்கையைத் தொடர்ந்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டு நாடுகளின் படைகளும் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றன. சில இடங்களில் எதிரிகளை நோக்கி, சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் முன்னேறியிருப்பதாக உக்ரைன் ராணுவத் தலைவர் ஒலக்சாண்டர் சிர்ஸ்கி தெரிவித்திருக்கிறார். எல்லையிலிருந்து சுமார் 13 கி.மீ தொலைவில் இருக்கும் மலா லோகன்யா என்ற கிராமத்தில் பலரை சிறைப்பிடிப்போம் என்று நம்புவதாகவும் அவர் கூறியிருக்கிறார். 1,000 சதுர கிலோ மீற்றர் அளவிலான ரஷ்ய நிலப் பரப்பை உக்ரைன் ராணுவம் கைப்பற்றியிருப்பதாக செய்தி கள் தெரிவிக்கின்றன. உக்ரைனின் தாக்குதல்களைத் தொடர்ந்து, தனது எல்லைப் பகுதியில் இரண்டு லட்சம் மக்களை ரஷ்யா வெளி யேற்றியிருக்கிறது. குர்ஸ்க் பிராந்தியத்தை மட்டுமன்றி, பெல்கோரோட் மாகாணத்திலும் அவசர நிலையை ரஷ்யா அமுல்படுத்தியிருக்கிறது.



எல்லைப் பகுதியில் உக்ரைனின் ஊடுருவலைத் தடுக்க முடியாமல் ரஷ்யா தடுமாறுகிறது. அதே நேரத்தில், உக்ரைனின் கிழக்கு பகுதியில் ரஷ்ய படைகள் முன்னேறிவருகின்றன. செர்ஹிவ்கா உள்ளிட்ட உக்ரைனின் நகரங்கள் சிலவற்றை கடந்த சில வாரங்களில் ரஷ்யா கைப்பற்றியிருக்கிறது.

கிழக்கு உக்ரைனைச் சேர்ந்த போக்ரோவ்ஸ்க் நகரம் ரஷ்யப் படையினரிடம் வீழும் நிலையில் இருக்கிறது. சுமார் 53 ஆயிரம் பேர் அந்தப் பகுதியில் வசித்துவரும் நிலையில், அங்கிருந்து மக்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

**உக்ரைனுக்கு மிகப்பெரிய ஆதரவை அமெரிக்கா அளித்துவருகிறது. உக்ரைனின் பாதுகாப்பு உதவிகள் என்ற பெயரில் பல பில்லியன் டொலர்களை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கியிருக்கிறது. ரஷ்யாவிற்கு எதிராக போர் புரிவதற்காக உக்ரைனுக்கு பல பில்லியன் டொலர்கள் உதவி செய்வதற்கான அனுமதியை அமெரிக்கப் பாராளுமன்றம் சில மாதங்களுக்கு முன்பு வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேர்தலில் ஒரு கட்சியின் முடிவு தான் தமிழ் மக்களின் முடிவாமே உண்மையா ?






ராமர் பாலம் அமைக்க எதிர்ப்புத் தெரிவிக்கிறாரே பிக்கு?

**மகாலட்சுமி — கொக்குவில்**

**படித்தால் மட்டும் போதுமா வியாசரே?**

பலரின் நினைப்பு அது தான்.
படித்து ஒரு பட்டம் பெற்றுவிட்டால் பத்து வருடத்திலாவது ஒரு அரச நியமனம் கிடைக்கும்.
அங்கு சென்று, இருந்து, உண்டு வந்தால் போதுமானது.
அறுபது வயதின் பின் பென்சன் வரும். அந்தப் பென்சனில் நாம் இறக்கும் வரை வாழ்ந்து விடலாம் என்று நினைக்கும் கூட்டமே இங்கு அதிகம்.
உண்மையில் படிப்பு என்பது மனித மனங்களைப் படிப்பதே. மற்றவருடன் எப்படிப்பேசுவது, பழகுவது, அடுத்தவர் மனம் கோணாமல் நடந்து கொள்வது எப்படி? எமது சொல்லும் செயலும் நேர் வழியுடையதா? இந்தக் கேள்விகளைச் சரி செய்து வாழ்வதே நல்ல மனிதனுக்கு அழகு.
அந்த அழகு புத்தகத்தினூடாக வராது என்பதை புரிந்து கொண்டால் சரி.

**இளங்கோ — மானிப்பாய்**

**பிரபாகரனின் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டது போல தமிழ் தேசியக் கட்சிகளின் செயற்பாடுகள் மக்கள் மயப் படாமைக்குக் காரணம் என்ன வியாசரே?**

அதற்கு முழுக்க முழுக்கக் காரணம் சுய நல அரசியல் மட்டுமே. இந்தத் தேர்தலில் நான் வெல்லது எப்படி? அடுத்த தேர்தலில் வெல்வதற்கு இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?
தெற்கு அரசியல் தளத்தில் என்ன வரப் பிரசாதங்கள் உண்டு.
அதைப் பெற்றுக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்.
நான் எப்படிப் பேசினால் அது மக்கள் மத்தியில் எடுபடும் ? எனது நடவடிக்கைகள் தமிழ் மக்களை நம்ப வைப்பதாக இருக்க வேண்டும்.
இப்படி சுய நலனில் கவனம் செலுத்துபவர்களை பரிசுத்த தியாகிகளுடன் ஒப்பிட்டுப் பேசினால் அது கடவுளுக்கும் அடுக்காது தம்பி.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய
கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**சுந்தரம் — துன்னாலை**

**தேர்தலில் ஒரு கட்சியின் முடிவு தான் தமிழ் மக்களின் முடிவாமே உண்மையா ?**

உங்கள் கேள்வியை வாசிக்கும் போது எனது றேடியோப் பெட்டியில் ஒலித்த பாடல் இது.
எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, நம் நாட்டிலே. இன்னும் எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே சொந்த நாட்டிலே.
சத்தியம் தவறாது உத்தமன் போலவே நடிக்கிறார். சமயம் பார்த்து பல வகையிலும் கொள்ளை அடிக்கிறார். பக்தனைப் போலவே பகல் வேசம் காட்டி, பாமர மக்களை வலையினில் மாட்டி, இன்னும் எத்தனை காலம் தான்...

**விஜயதரன் — உரும்பிராய்**

**தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்களிடையேயான ஆதரவு எவ்வாறு உள்ளது வியாசரே?**

கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்கு தமிழ்ப் பொது வேட்பாளர் விடயமே தெரியாது. அந்தளவிற்கு தகவல் அவர்களைச் சேரவில்லை.
தமிழினத்தின் ஒட்டு மொத்த பலத்தையும் ஒன்று திரட்டி காட்டுகின்றோம் என்று மார் தட்டியவர்கள் எழுதினால் எல்லாம் சரி என்று நினைப்பது தான் வேடிக்கையான விடயம்.
முதலில் மக்களைச் சந்தியுங்கள். அவர்களுக்கு தமிழ்ப் பொது வேட்பாளர்கள் தொடர்பான தெளிவுபடுத்தலை சொல்லுங்கள் இதைவிட்டுவிட்டு உங்கள் கற்பனை உலகில் இருந்து கொண்டு கனவுக் கோட்டை கட்டினால் அது கண் விழித்த பின் காணாமல்ப் போய்விடும் இது தான் உண்மை.

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**தமிழ்ப்பொது வேட்பாளர் முடிவு தவறானது என நான் நினைக்கின்றேன் ஏனெனில் தமிழினத்தின் ஒட்டு மொத்த வாக்கும் அவருக்குக் கிடைக்காமல் விட்டால் நிலை எப்படியாக இருக்கும்?**

இதை இவ்விடத்தில் ஒன்றுக்கு நூறு முறை கூறிவிட்டோம். ஆயினும் இது தொடர்பாக எவரும் கரிசனை காட்டுவதாக தெரியவில்லை.
தவிர, பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்ட நாட்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. எவராவது தமிழ் மக்களுக்கு இது தொடர்பில் தெளிவு படுத்தல்களை செய்கிறார்களா?
ஏதோ 2009 காலப் பகுதியைப் போல தற்போதைய காலத்தை நினைத்துக் கொண்டு நாம் கை காட்டினால் அவருக்குத் தமிழ் மக்கள் புள்ளடியிடுவார்கள் என்று பகல் கனவு கண்டு கொண்டிருப்பது வேதனையான விடயம்.

**மதுவன் — மீசாலை**

**ராமர் பாலம் அமைக்க எதிர்ப்புத் தெரிவிக்கிறாரே பிக்கு?**

எண் சாண் உடம்பிற்கு சென்னி சிறந்தது. இலங்கையின் சென்னியாக விளங்குவது வடக்கு.
இங்கே தான் இராமர் பாலம் இருக்கிறது.இங்கு இந்தியா- இலங்கை இணைந்தால் அது வடக்குக்கிழக்கு மக்களுக்கு வரப்பிரசாதமாகிவிடும்.
அத்துடன் வடக்குக்கிழக்கு இந்தியாவின் ஒரு பகுதியாகி விடும் என்ற பயம் தெற்குப் பெரும்பான்மையினருக்கு இருக்கவே செய்கிறது.
இந்த நேரம் இந்தியா செய்ய வேண்டியதும் இதுவே. இராமர் பாலத்தை காரணங்காட்டி தமிழினத்துக்கான உரிமைகளைப் பெற்றுத்தர இந்தியா முற்பட வேண்டும்.
அவ்வாறு இந்தியா செய்யுமா என்பதில் தான் கேள்வியே இருக்கிறது.

**சுதன் — குப்பிளான்**

**விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து தடைப்பட்டியலில் வைத்திருக்கும் கனடா, தமிழர்களுக்கு சுய நிர்ணய உரிமையைக் கொடுக்கும் படி கூறுவது?**

என்ன செய்ய. தாய் எதிரி, குட்டி உறவு என்ற நிலையில் சர்வதேச நாடுகள் நிற்பது தான் மிகப் பெரும் அரசியல் இராஜ தந்திரம்.
தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டும் என்று இலங்கை அரசை அழுத்துவதாய் சர்வதேசம் கதறும்.
இது எப்படி என்றால் , நான் அடிப்பது போல அடிக்கிறேன் நீ அழுவது போல அழு என்பது போலத்தான்.
இந்த ஏய்க்காட்டு வேலைகளின் மாயையை உண்மை என்று நம்பும் தமிழினம் ஆஹா சர்வதேசம் எமது உரிமைகளைப் பெற்றுத் தரப் போகிறது என்று இன்புற்றுக் கிடக்கிறது.
அடபோங்கடா நீங்களும் உங்கள் தீர்ப்பும், தீர்வும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆரை ஆதரிக்கப் போகுதாம்...

**மூப்பர்:-** விதானையார் எப்பவும் கிரந்தக் கேள்வி தான் கேட்பார்.

**விதானையார்:-** என்ன மூப்பர் சொல்லுறியள்.

**மூப்பர்:-** வேற, நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலோட இலங்கைத் தமிழரசுக் கட்சி இரண்டா உடைஞ்சு போய்விடுமோ எண்ட ஏக்கத்தில நாங்கள் இருக்கிறம்.

இந்த நிலையில ஜனாதிபதித் தேர்தலில தமிழரசுக் கட்சி ஆரை ஆதரிக்கப் போகுது எண்டு கேட்டால், அது கிரந்தம் தானே!

**மூப்பர்:-** நான் ஒன்றும் கிரந்தம் கதைக்கல்ல. செப்ரெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடக்கப் போகுது.

தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் தங்கட நிலைப்பாட்டை வெளிப்படுத்திப் போட்டினம்.

வழமை போல முன்னணி ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கிறதாகச் சொல்லிப் போட்டுது.

இனி, தமிழரசுக் கட்சியின்ர நிலைப்பாடு என்ன? என்பதை வெளிப்படையாகச் சொல்லத்தானே வேணும்.

**பண்டிதர்:-** தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை இரண்டு தலைவர்கள் தங்கட நிலைப்பாட்டைச் சொல்லிப் போட்டினம்

**சிறாப்பர்:-** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:-** தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேந்திரனை, தான் ஆதரிப்பேன் எண்டு சிறீதரன் எம்.பி பகிரங்கமாகக் கூறிப்போட்டார்.

அதேபோல, தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவில்லை எண்டு சுமந்திரன் எம்.பி சொல்லுகிறார்.

அப்ப இரண்டு பேர் தங்கட நிலைப்பாட்டைச் சொல்லிப் போட்டினம் தானே!.

**வாத்தியார்:-** பண்டிதர் ஐயா, நீங்கள் கேட்டனான். தமிழரசுக் கட்சி ஆருக்கு ஆதரவு எண்டு. அதை எங்கட மூப்பர் கிரந்தக்கேள்வி எண்டிட்டார்.

என்னைப் பொறுத்தவரை இந்த ஜனாதிபதித் தேர்தலோட எங்கட தமிழரசுக் கட்சிக்குள்ள கடும் குழப்பம் ஏற்படக் கூடிய வாய்ப்புத் தான் உண்டு.


**சிறாப்பர்:-** ஓ!இப்ப இலங்கையில பழம் பெரும் கட்சிகள் தானே காணாமல் போகுது. அந்த நிலை இஞ்சயும் ஏற்படப் போகுதாக்கும்.

**கங்காணி:-** அது சரி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது எண்டு அது கட்சிக்குள் கன சிக்கலை ஏற்படுத்தும்.

**மூப்பர்:-** அப்ப வாத்தியார் என்ன? செய்யிறது

**வாத்தியார்:-** தமிழரசுக் கட்சியின்ர எதிர் காலத்தைக் காப்பாற்ற வேணும் எண்ட சிந்தனை இருந்தால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில தமிழ் மக்கள் தாமே தீர்மானித்து வாக்களிக் கட்டும் எண்டதொரு முடிவை எடுக்கிறது தான் ஒரே வழி.

**சிறாப்பர்:-** நீங்கள் இப்படிச் சொல்லுறியள். இந்தக் கருத்தை யாரும் முன்வைத்தால், ஒரு நீண்ட நெடுங்காலக் கட்சி அப்படிச் சொல்லுறது முறையோ எண்டு சிலர்



## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக தமிழரசுக்கட்சி இடறும்போல கிடக்கு

சொல்லுறது சரிதான். ஆனால் சிறீதரன் எம்.பி தன்ர தனிப்பட்ட நிலைப்பாட்டைச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் சுமந்திரன் எம்.பி தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்காது எண்டல்லோ சொல்லுறார்.

அப்படியானால், தமிழரசுக் கட்சி கூடி தீர்மானம் எடுக்காமல் எப்படி தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்காது எண்டு சொல்ல முடியுமெண்டொரு கேள்வி எழுமல்லோ.

**விதானையார்:-** அது தான் நான் ஏற்கனவே தமிழரசுக் கட்சியின் மத்திய குழு ஒரு மித்த நிலைப்பாட்டைஎடுக்கத் தவறினால், என்ன நடக்கும்.

**வாத்தியார்:-** தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் மூன்றாகக் கன்னை பிரிவினம்.

ஒருபகுதி தமிழ்ப் பொது வேட்பாளர் எண்டு சொல்லும், இன்னொரு பகுதி சிங்கள வேட்பாளர் ஒருவரைச் சுட்டும்.

மூன்றாவது பகுதி மௌனம் காக்கும். இந்த இடத்தில ஒருவரைச் சுட்டுவது முடியாத காரியமாகப் போகும்.

அப்படி ஒருவரைப் பெயர் குறித்துக் கூறினால் முட்டிமோதுவினம்.

ஆகையால வாத்தியார் சொல்லுறதும் சரிவராது போலத்தான் தெரியுது.

**சாத்திரியார்:-** அது சரி, ஜனாதிபதித் தேர்தலில யாரை ஆதரிக்கிறது என்பதை தமிழரசுக் கட்சி முன்கூட்டியே அறிவித் தால் என்ன?

**வாத்தியார்:-** இப்ப தமிழரசுக் கட் சிக்குள்ள நிலைமை எப்படி இருக்குதென் பது தெரியுது தானே! ஆகையால அவர்கள் எப்ப முடிவு எடுக்கினமோ எடுக்கட்டும்.

ஆனால் ஆருக்கு வாக்களிக்கிறது என்ற சரியான தீர்மானத்தை எங்கட மக்கள் நிச்சயம் எடுப்பினம்.

எங்கட மக்கள் எடுத்த எந்தத் தீர்மானமும் பிழைத்ததில்லை.

அவர்களிட்ட நீண்ட நெடும் அனுபவமும் இருக்குது. திரிகரணசுத்தியும் இருக்குது.

ஆகையால , அவர்கள் அனைத்தையும் ஆராய்ந்து முடிவு எடுப்பினம். எந்த அரசியல் கட்சியின் ஆலோசனையும் வழிகாட்டலும் அவர்களுக்குத் தேவையில்லை. அப்படி வழிகாட்டக் கூடிய தலைமையில தமிழ்க் கட்சிகளும் இல்லை.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் கூற, ஆலடி மௌனமாகியது.

மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** எங்கட யாழ்ப்பாண மாநகர சபை, கழிவகற்றலைச் சிறப்பாகச் செய்வதற்காக மாநகர சபை எல்லைக்குள்ள வட்டார ரீதியாக குப்பை கூழங்களைச் சேகரிக்கிற இடங்களை அமைத்து அங்கு தொழிலாளர் களையும் பணிக்கு அமர்த்தியிருக்குது.

இது ஒரு நல்ல திட்ட. இருந்தும் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படுகின்ற இடங்கள் பொது மக்களுக்குத் தெரியாமல் உள்ளது. இது ஒரு விடயம்.

மற்றையது, இவ்வாறு கழிவுப்பொருட்களைச் சேகரிக்கின்ற இடங்களில் பணிக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள், பொது மக்கள் கொண்டு வாற குப்பை கூழங்களை தரம்பிரிக்க வேண்டும் எனக் கூறித் திருப்பி அனுப்ப முயற்சிப்பதன் ஊடாக, லஞ்சம் பெறுகின்ற நோக்கம் முன்னெழுகிறது.

எனவே இது விடயத்தில் யாழ்.மாநகர சபை உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



25 செங்கை ஆழியான்


கொத்தளங்கள், அரண் சுவர்கள் , அரண்சுவர்களிலிருந்து உள்ளிறங்கும் சரிவுப்படிகள் அனைத்தும் கட்டி முடிக் கப்பட்டன. ஐங்கோண வடிவில் யாழ்ப்பாணக் கோட்டை கம்பீரமாக உயர்ந்து நின்றது. இராணுவப் பாது காப்பிற்கும், நிர்வாக நடவடிக்கைகளுக்கும் உரிய கட்டடங்கள் கோட்டைக்குள் அமைந்திருந்தன. ஒல்லாந்தரின் வதிவிட நகரமாகக் கோட்டைக்கு வெளியே பறங்கித்தெரு அமைந்தது.

“இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் ஒல்லாந்தர் காலத்தில் பல கோட்டைகள் இராணுவ முக்கியத்துடன் விளங்கியிருந்தன. ஆனால், அவற்றில் எதுவும் யாழ்ப்பாணக் கோட்டையின் தொழில்நுட்ப நேர்த்திக்கும் முழுமைக்கும் ஈடாகாது” என டபிள்யூ.ஏ. நெல்சன் குறிப்பிட்டுள்ளார். கோட்டையின் வாயிற்கதவு ஆறு அங்குலங்களுக்கு மேற் தடிப்பான பாரிய மரக்கதவு ஆகும். அதில் போர் யானைகள் முட்டி மோதிப் பிளக்காதிருக்க வேண்டி, கூரான ஈட்டி முனை கள் பொருத்தப்பட்டிருந் தன. வில்வளைவான வாயிற் கடவையிலிருந்து அகழியைக் கடப்பதற்கு தொங்கு பாலம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இக்கதவில் கோட்டை கட்டி முடிக் கப்பட்ட ஆண்டாக 1680 குறிக்கப்பட்டிருந்தது. அத்தோடு ஒல்லாந்தக் கம்பனியின் (VOC யோடு கூடிய சின்னமும் பொறிக்கப்பட்டிருந்தது. கோட்டையின் வெளிச்சுற்று வேலைகள் 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கட்டமைக் கப்பட்டு, 1792 இல் நிறைவுற்றன.

கோட்டைக்குள் ஒல்லாந்த லெப்ரினன்ற் கவனர்களின் பங்களா. பின்னர் ராணி மாளிகை அமைந்த இடத்தில் கட்டப்பட்டது. போர்த்துக்கேயரின் கத்தோலிக்க தேவாலயம், ஒல்லாந்தரினால் புதுப்பிக்கப்பட்டதுடன் சதுரங்கப்பலகை வடிவத்தையும் பெற்றது. இத் தேவாலயம் கோட்டையினுள் வடபகுதியில் காணப்பட்டது. சிறைக்கூடங்கள், அதிகாரிகளின் நிர்வாகப்பகுதிகள் என்பன கோட்டையினுள் அமைந்திருந்தன. கோட்டையின் மையம் ஏறத்தாழ நான்கு ஏக்கர்ப் பரப்பினைக் கொண்ட மைதானமாகும். அது படையணியினரின் பயிற்சிக்கும் நடைபவனிக்கும் உதவியது.

கோட்டை இரண்டு வாயில்களைக் கொண்டிருந்தது. ஒன்று நீர் வழி, மற்றையது நில வழி. கோட்டையின் தென் மதிற் சுவரில், நீர் வழி அமைந்திருந்தது. கடனீரேரியூடாக வரும் ஒருவர், கோட்டை மதிலினருகில் சிறு கலத்தை நிறுத்திவிட்டு நீர் வழியூடாக காவலர்கள் அனுமதித்தால் கோட்டைக்குள் நுழையமுடியும்.

(தொடரும்...)




காலத்தின் பதிவு 122

# கடல் புறா

அவள் அழகிய கரங்கள் அவனை ஜாக்கிரதையாகப் பிடித்தன. அவள் பூவுடல் அவன் முரட்டு உடலுக்குச் சாந்தியளிப்பது போல், சாய்ந்த அவன் உடலை மெல்ல எதிர்த்து நகர்த்தியது. அப்படி அவன் உடலை எதிர்த்துத் தள்ளியும், கைகளால் அவனை இறுகப் பிடித்தும் அறைக்குள் அவனை அழைத்துச் சென்று மஞ்சளழகி மெல்ல அவனை மஞ்சத்தில் படுக்க வைத்தாள்.

அவள் எத்தனையோ லேசாகப் படுக்க வைத்தும் திடீரெனப் படுக்கையில் விழுந்த இளைய பல்லவன் அவளை நோக்கி வெறிச் சிரிப்புச் சிரித்தான். “நீ... இங்கே... வா வா..” என்று அவள் கையைப் பிடித்து இழுத்து மஞ் சத்தில் தன் பக்கத்திலும் உட்கார வைத்துக் கொண்டான். அதற்குப் பிறகு கைகளை அவளை விட்டு விலக்கி மஞ்சத்தில் போட்டுக் கொண்டு பெருமூச்செறிந்தான்.

மஞ்சளழகி அவனைப் பார்த்து அவன் செயல்களைப் பார்த்து வியந்தாள். அத்தனை குடியிலும் அவன் தன்னை அணைக்கவோ, அணைத்துப் படுக்கைக்கு இழுக்கவோ முயலவில்லையென்பதைக் கண்டாள். அவன் கைகள்கூடத் தன்னைத் தொடாமலே மஞ்சத்தில் விழுந்து கிடந்ததைப் பார்த்து, “மது மயக்கத்திலும் நடத்தை பிறழாத பெரும் பண்பு இவர் ரத்தத்தில் ஊறியிருக்கிறது.

எத்தனை சிறந்த மனிதர்! என்று அவனைச் சிலாகித்த மஞ்சள ழகி, இத்தனை சிறந்த மனிதரைத் தந்தை அழித்துவிடப் பார்க்கிறாரே? என்று தனக்குள் பெரும் துக்கத்தையும் பிறப்பித்துக் கொண்டாள்.

அவள் எண்ணங்களைப் புரிந்து கொள்ளும் நிலையில் இளையபல்லவன் இல்லாததைப் புரிந்து கொண்ட மஞ்சளழகி, அவனுக்குச் சுரணை வரச் செய்தவற்காகச் சற்று எட்ட இருந்த தங்கப் பாத்திரத்தில் இருந்த நீரில் தன் சேலைத் தலைப்பை நனைத்து வந்து மஞ்சத்தில் உட்கார்ந்து இளையபல்லவன் முகத்தில் நீர்த்துளிகளைப் பிழிந்தாள். அந்த நீர்த்துளிகளுக் கும் அசையும் நிலையில் படைத் தலைவன் இல்லாததால், அவன் அறிவைத் தொட்டுத் துலக்க உரையாடல் முறையைக் கையாண்டான். அதை முன்னிட்டு, "இளையபல்லவரே! சோழர் படைத்தலைவரே," என்று அவன் காதுக்கருகில் குனிந்து மந்திரம் போல் சொற்களை உதிர்த்தாள்.

அதைக் கேட்டதும் இளையபல்லவன் முகத்தில் அசட்டுச் சிரிப்பின் ரேகை படர்ந்தது. “ஆம்! நான் இளைய பல்லவன். ஏன் தெரியுமா? பல்லவ மன்னன். என்

# குடிப் பழக்கம்

அண்ணன். நான் அவனுக்கு இளையவன். இதுதான் தெளிவு.. தெளிவு..” என்றான்.

“ஆம் ஆம். நீங்கள் இளையபல்லவர்தான். உங்களுக்குக் கடமை இருக்கிறது. அதுவும் கலிங்கத்தின் கடற்படைப் பலத்தை உடைக்கும் கடமை இருக்கிறது. விழித்துக் கொள்ளுங்கள் படைத் தலைவரே! என்று தன் கண்களால் அவன் கண்களை உற்று நோக்கிக்கொண்டு சொற்களை உறுதியுடன், திடமாக, ஒவ்வொன்றாக அவன் புத்தியில் உறையும்படி உதிர்த்தாள்.

சொற்கள் அவன் புத்தியில் உறையவில்லை. அறிவு மங்கியே கிடந்தது. “ஆம் ஆம்! கலிங்கத்தின் கடற்படை கடலில் தவிடு பொடி. அதற்குப் போர்க் கப்பல். ஆம் போர்க்கப்பல் வேண்டும். கூப்பிடு கண்டியத் தேவனை. என்று இரைந்தான் இளைய பல்லவன். “இப்பொழுது இரவு” "சதியாலோசனை. இரவு அல்ல. இது பகல், கூப்பிடு கண்டியத் தேவனை."

“சும்மா இருங்கள். இது இரவு தான்." இல்லை.. அதோ சூரியன்," என்று தூரத்திலிருந்த தூங்கா விளக்கைக் காட்டினான் இளையபல்லவன். “அது விளக்கு." "சூரியனும் ஒரு விளக்கு. இரண்டும் ஒன்று. கண்டியத் தேவனைக் கூப்பிடு. உம், கூப் பிடு. மாட்டேன் நீ என் மனைவி. கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை. தமிழ்ப் பழமொழி சொற்படி செய். கூப்பிடு."


எதற்குக் கண்டியத்தேவர்? போர்க்கப்பல்...? இப்பொழுதிருப்பது?, அதுவும் போர்க்கப்பல். அப்படி வேண்டாம். வேறு எப்படி வேண்டும்? (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவளிக்கும் சாரதிகளே...

விதியை எழுதும் வீதிகளில்
எமனாய் உருமாறும் சாரதிகளே
வினவுகிறேன் உங்களிடம்
விடை தந்து சென்றுடுவீர
பொறுமையின்றி அதிவேகமேன்?
பொறுமை காக்க மறுப்பது ஏன்?
கொன்று போடும் கொல்கலங்களில்
கால் நடைகளா மானிடர்?
உயிரின் கனதி அறியிரோ?
உயிர்களைக் கொல்லும் சாரத்தியமா?
போதை நிலையில் சாரத்தியசாகசம்
போதும் போதும் உயிரிழப்பு
பலி கொடுத்த பரம்பரை நாம்
இன்னுமா இழப்பது?
துடிக்கத் துடிக்கக் கொன்று
துயரில் நம் இனம் மூழ்க
பிணையில் நீங்கள் வெளியே
புலம்பலோ நமது சொந்தம்
தாயை, தந்தையை, தமையனை,
பச்சிளம் குழந்தையை - எமலோகம்
அனுப்பிய வீரதீரரே
சிந்திய குருதியை
சிந்தித்துப் பாருங்கள்
மரணத்தின் வாசலில் மண்டியிடாதீர்!
வாகன இருக்கையில் இருந்து
வானத்தில் பறக்க முயலாதீர்
தெருவோர உயிர்களை,
பயணிகளின் உயிர்களை
பாதுகாக்கத் திடங்கொள்ளுங்கள்

உடுவிலூர் கலா



## நல்லதோர் தமிழினமாய்

எங்கும் முழங்குது சங்கு நாதமாய்
இங்கோர் இனத்தீர்வு
பக்கமின்றி பகிர்வோம்
எங்கள் ஆளுமையில்
பாங்கான வாய்மொழிகள்
எங்களுக்காய் இறங்கியோர்
எத்தனை கண்டோம்!
எங்கள் தலைமைகள்
தங்களுக்கோர் தனிப்பாதைகள் பிரித்து
இனியொரு விதி செய்வோமென
இனிதாய் இணைந்திடில்
விடிவொன்று மிளிரும்
கால மாற்றங்கள்
வாழ்வுரிமை மாற்றாது
வாழ்ந்து காட்டுவோம்
நல்லதோர் தமிழினமாய்

தமிழினியன் பரந்தாமன்,
வவுனியா.

## கோபம்!

உள்ளத்தின் அழகினை உருக்குலைக்கும் கோபம்
உறவினில் பிரிவினை தினம் வளர்க்கும்
கள்ளத் தனங்களைத் தான் கொடுக்கும் – நல்ல
கருணை மனங்களை கருவறுக்கும்
மனித குணங்களை சிதைத்து விடும் – கொடும்
மாய வடிவினில் உடல் துடிக்கும்
வினையின் விளைவுகள் முடிந்த பின்னே – மன
வேதனை வாழ்வை பரிசளிக்கும்
நட்பில் பகைமையை விதைத்து விடும் பிறர்
நன்மை புரிந்ததை மறைத்து விடும்
நுட்பத் திறன்களை கலைத்து விடும் – அது
நோயாய் இதயத்தை பிடித்து விடும்.
அன்பின் வலிமையைக் கரைத்து விடும் – அறிவு
ஆற்றல் மேன்மையை கெடுத்து விடும்
முன் பின் யோசனை தடுத்து விடும் – மிக
மூண்டெழுந்தே நம்மை அழித்து விடும்.
பழகும் அன்பினை பறித்தெடுக்கும் – நல்ல
பாச மனங்களை வெறுத்தொதுக்கும்
உலகில் மனிதராய் வாழ்ந்திடவே – கோப
உணர்வை அறிவால் வென்றிடுவோம்.
விலங்கு மனிதனை தோற்றுவிக்கும் – போர்
வெறியில் மனிதரை ஆட்டுவிக்கும்
துலங்கும் அறிவினை மழுங்கடிக்கும் கோபம்
தூய மனதையும் கலங்க வைக்கும்

"ஆனையூர்க் கவிராயர்"

## மௌனத்தின் தேடல்- 730




## வாக்குரிமை

ஜனநாயக நாட்டில் சமநீதி
நிலைக்க, சகலதிலும்
தன்னிறைவு காண
சமாதான ஒற்றுமை
நட்புறவு இணைய இதோ!
வாக்குரிமை வழி சமைக்குமா?
வாக்குரிமை எனும் தகுதி-
உரிமை கொண்ட பிரஜையின்
பங்களிப்புடன்
ஒவ்வொரு தனிமனிதன்
சுதந்திரம் காப்பாற்றப்பட்டு
வாழ வழி காட்டட்டும்!

அபி குலமாலிகா
சித்தன்கேணி

## ஐந்து வயசுக்குழந்தை

தேர்தல் வந்தால் மட்டும்
எங்கள் தெருவெல்லாம்
விழாக்கோலம்
ஓடித்திரியும் வாகனத்தில்
ஓசியில் நாம் ஏற முடியும்
பாசி படர்ந்த சுவர்கள்
சுவரொட்டி மூலம் அழகுபெறும்
அம்மா இவர்கள் யார்
அன்பாய் இருக்கிறார்
சும்மா எல்லாமே எமக்காய்
தருகின்றார்.
இப்போது தான் பிறந்தார்.
இன்பமாய் இருக்கின்றார்.
ஐந்து வயசுக் குழந்தை
ஆனதுமே மறைந்திடுவார்.

துணவியூர் நடா

## தேர்தல் விதி

சாதனைகள் செய்வதாய்
யோசனைகள் பிறக்கும்
யோசியர் சொல்வதெல்லாம்
தேசியமாய்த் தெரியும்
இடங்கர் மூடக்கர்-
அரக்கர் நாவிலெல்லாம்
இன்பத்தே னூறி வழியும்
விலையேற்றங்கள் விசித்திரமாய்
வீழ்ச்சியுறும்
வெற்றி நாளும் வந்துசேரும்-அன்றே
வாக்களித்த கைகளுக்கு வேடிக்கை
புரியும்

[illegible]

## மௌனத்தின் தேடல்- 731




அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசச் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## விழிப்புணர்வு

வாக்கெடுப்பு காலத்தில் வாசல் தோறும் வந்திடுவர்
வாயால் பல நல்வாக்குறுதிகள் கொடுத்திடுவர்
தேர்தல் காலத்தில் தேன் மாதிரி இனிக்கப் பேசிடுவர்
தேர்தலில் வென்ற பின் தேள் மாதிரி கொட்டிடுவர்
பொதுமக்களும் பொன்னான வார்த்தையை நம்பிடுவர்
பொன்னான புள்ளடியை அவர்களுக்கு போட்டிடுவர்
பொய் வேஷம் என்றவுடன் பொங்கியே எழுந்திடுவர்

ஆ. செல்வி, திருநாவலூர்.

## வாக்குரிமை

நாம் எல்லோரும் இந் நாட்டுப் பிரஜைகள் என
எமது சுய நிர்ணய உரிமையை தெளிவுபடுத்தி
தேர்தலில் எமது வாக்குகளை நாமே அளித்திடும்
நாங்களும் இந்நாட்டுப் பிரஜா உரிமைவாதிகளே

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA EXPO - 2024

JAFFNA EXPO - 2024

## வர்த்தகக் கண்காட்சி சிறப்பு மலர்


## வெளிநாட்டில் கல்வி கற்றல்

**FINLAND**

- சார்ந்து இருப்பவர்களுடனான பயணம்
- IELTS 6.0-6.5 / PTE - 55%
- AL ல் 3 பாடத்திலும் "S" சித்தி
- நுழைவுத் தேர்வு
- வயதெல்லை இல்லை

**HUNGARY**

- University of Debrecen
- மாணவர்களுக்கு மட்டுமான பயணம்
- Budapest Metropolitan University
- IELTS / PTE இல்லை
- Zoom மூலமான நேர்காணல் மட்டும்.

**INDIA**

- Savitribai Phule Pune University, Mumbai
- 4 வருடத்திற்கான கல்வி கட்டணத்திற்கு 100% உதவித் தொகை

**பணத்தினை வெளிப்படுத்தல்**

சேமிப்பு / நிலையான வைப்பு

**Vision 8 Academy Education**

V8A

Vision 8 Academy (Pvt) Ltd.

Business Registration No: PV 00285328

No. 403/1/5, Galle Road, ( Opposite Vogue Jewellers), Colombo 03.

Tel: +94 77 441 6655 | Email: amintha67@hotmail.com



தெரிவுசெய்த பொருட்கள் 40% வரை கழிவு

JAFFNA EXPO - 2024

## நிர்மாணம், கைத்தொழில், கல்வி, வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்ட விழா

23 24 25 ஆம் திகதி ஆகஸ்ட் 2024

@ முற்றவெளி விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம், இலங்கை

மு.ப.10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

கட்டிடம் மற்றும் நிர்மாணப் பொருட்கள்

கட்டுமான ஆலோசனை சேவைகள்

கல்வி, மற்றும் தகவல் தொழில்நுட்பம்

கட்டுமான இயந்திரங்கள் மற்றும் கைத்தொழில் வாகனங்கள்

உபகரணங்கள் மற்றும் சாதனங்கள்

நிலைபேறான வலுசக்தி

கைத்தொழில் மற்றும் பொறியியல்

கனரகத்தொழில் வாகனங்கள்

ALUMEX TVS asianpaints SCOT CAMPUS வலம்புரி

DAN agro EME

+94 77 22 79 594

+94 72 21 22 709



**High Quality & most Trusted Brand In Sri Lanka**

TAIAN LANKA

- Square Tube
- Catwalk Plates
- GI / EGI / CR Sheet
- Rectangular Tube
- Round Tube
- Scaffolding Frame
- Walking Planks
- C-Purlin
- Scaffolding step Ladder

333, 1/16, OLD MOOR STREET, COLOMBO-12, SRILANKA.

FAX: +9411 232 3419 MOB: +94777 445 944

EMAIL: info@taianlankasteel.com WEB: taianlankasteel.com

+94112 332 253

(சி-2381)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

413

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# இந்த மரணங்களுக்கு யார் பொறுப்பு?

"எத்தனை இறப்புக்களை வைத்திய சாலைகள் கண்டிருக்கும். உயிர் பிரியும் தறு வாயிலும் அதன் பின்னரும் சுற்றி நின்று கத றும் சுற்றத்தினதும் உறவுகளினதும் வேத னையை ஜீரணித்துக் கொள்ள எத்தனை நெஞ்சுரம் வேண்டும். நித்தமும் நடக்கும் இந்த நிகழ்வுகள் எதனைச் சொல்கின்றன? இவற்றிலே தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய இறப்புக்கள் எத்தனை?"

சாவுகள் மலிந்து மனங்கள் மரத்துப் போன பூமியிது. ஓர் உயிரின் முடிவிலே எவ்வளவு துயரங்கள்? எத்தனை கனவுகளின் சிதை வுகள்?

ஏக்கம், கவலை, கோபம், வெறுப்பு விரக்தி என எத்தனை உணர்வுகளின் கொந்தளிப் புக்கள். பெருகிச் செல்லும் இந்த இழப்புக்களை தடுத்திருக்கக் கூடிய இறப்புக்களை தாங்கிக் கொள்வது, சகித்துக் கொள்வது மிகவும் துயர மானதும் கஷ்டமானதுமான அனுபவம் என் பது எவருக்கும் புரியும். இந்த இறப்புக்களை மறைக்கவோ, நியாயப்படுத்தவோ முயல்வது மனிதத்துவத்துக்கும் மனச்சாட்சிக்கும் விரோ தமானது.

எத்தனை இறப்புக்களை வைத்தியசா லைகள் கண்டிருக்கும். உயிர் பிரியும் தறு வாயிலும் அதன் பின்னரும் சுற்றி நின்று கத றும் சுற்றத்தினதும் உறவுகளினதும் வேத னையை ஜீரணித்துக் கொள்ள எத்தனை நெஞ்சுரம் வேண்டும். நித்தமும் நடக்கும் இந்த நிகழ்வுகள் எதனைச் சொல்கின்றன? இவற்றிலே தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய இறப்புக்கள் எத்தனை?

இளம் மனைவியையும் பிஞ்சுக் குழந்தை களையும் தவிக்கவிட்டு மாரடைப்பால் மர ணித்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? ஈரல் நோய் காரணமாக இரத்தவாந்தியுடன் அனுமதிக்கப்பட்டு இறந்து போனவர்கள் எத்தனை பேர்? திடீரென ஏற்பட்ட பாரிசவாதத் தால் நம்மை விட்டு மறைந்து போனவர்கள் எத்தனைபேர்?

தொழிலுக்கு போகும் பாதையிலே வாகனத் தால் மோதுண்டு மடிந்துபோனவர்கள் எத் தனை பேர்? நஞ்சுண்ட நிலையில் அனு மதிக்கப்பட்டு இறந்து போனவர்கள் எத்தனை பேர்? சமூக விரோத கும்பல்களினால் சட்டத் துக்குப் புறம்பான விதத்திலே கொல்லப்பட் டவர்கள் எத்தனை பேர்? உடல் பருத்து நீரி ழிவு, உயர்குருதி அமுக்கம் ஏற்பட்டு மரணிப் பவர்கள் எத்தனை பேர்? கலாசார சீர்கேடுகள் காரணமாக சிக்கல்களுக்கு ஆட்பட்டு மன வேதனையுடன் மரணிப்பர்கள் எத்தனை பேர்? சுற்றாடல் மாசடைவதால் தொற்று நோய்கள் மற்றும் புற்று நோய் என்பன ஏற்பட்ட இறந்து கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்?

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உற வினர்களின் ஆதரவோ அரவணைப்போ இன்றி அன்புக்கு ஏங்கி மரணித்துப் போகும் முதியவர்கள் எத்தனைபேர்? முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த இறப்புக் களுக்கு எல்லாம் யார் பொறுப்பு?

இங்கு சாவுகள் மலிந்து போனமை உண்மை யிலே யார் செய்த குற்றத்தினால்?

சோறு தீத்துவதை ஒரு சம்பிரதாய சடங்காகவே கொண்டாடி எம்மை சோற்றிற்கும் மாப்பொரு ளுக்கும் அடிமையாக்கி நோயாளியாக்கிய எமது சமுதாயத்தின் குற்றமா? மக்களுக்கு போதுமான மருத்துவ சுகாதார அறிவை புகட்டத் தவறிய மருத் துவத் துறையினரின் குற்றமா? ஆரோக்கியமற்ற உணவுப் பொருள்களையும் பானங் களையும் அருமருந்து போல போலியாக விளம்பரம் செய்ய இடமளித்த ஊடகத்துறையினரின். குற்றமா?

உடற்பயிற்சி ஓர் உயிர்காப்பு பயிற்சி என்பதை சிறுவர்கள் மனதிலே பதிப்பிக்கத் தவறிய பெற்றோர்களின் குற்றமா? நோயுற்று வைத்தி யசாலைக்கு வரும் பொழுது அதி உச்சக் கவனிப்பு வசதிகளையும் கவனிப்பையும் உறுதிப்படுத்தாத சுகாதாரத் துறையினரின் குற்றமா? உயிர் கொல்லிகளான சிகரெட், சுருட்டு, பீடி போன்ற வற்றை கடைகளிலே விற்பனை செய்வதற்கு அனுமதித்தவர்களின் குற்றமா? போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த முடியாது போன காவல் துறையினரின் குற்றமா?

தீய பழக்கங்களையும் சமுதாய சீரழிப்பு நடவடிக்கைகளையும் எம்மிடையே பரப்ப அனுமதித்துக் கொண்டிருக்கும் எமது சமுதாயக் கட்டமைப்பின் குற்றமா? ஒருவரை பசியாத பொழுதும் உண்ணுமாறு வற்புறுத்துவதை ஓர் உபசரிப்பு முறையாகக் கருதும் எமது கலா சாரத்தின் குற்றமா?

எமது மக்களிடையே அன்பு, அமைதி, ஆதரவு, மன்னிக்கும் மனோபாவம், துயர் துடைப்பு, தியானம் போன்ற நல்ல விடயங்களை வேரூன்ற வைக்கத் தவறிய எமது மதங்களின் குற்றமா? பொன் கொழிக்கும் விளைநிலத்திலே உயிர் கொல்லிகளான புகையிலையை பயிரிட்டும் நஞ்சு தெளிக்கப்பட்ட மரக்கறி, பழ வகைகளை சந்தையிலே விற்பனை செய்து வருகின்ற விவசாயிகளின் குற்றமா? சந்து பொந்துகள் எங்கும் சாராயக் கடைகள் திறக்க அனுமதித்தவர்களின் குற்றமா?

சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்பு ணர்வை ஏற்படுத்தத் தவறிய கற்றறிந்தவர்களின் குற்றமா? சமுதாய சீர்கேடுகளுக்கு வழிகோலும் ரி.வி தொடர் நிகழ்ச்சிகளுக்கு அடிமையாகி இளம் சமுதாயத்தினரையும் அதற்கு பலிகொடுத்துக் கொண்டிருக்கும் குடும்பத்தவர்களின் குற்றமா? தெருவிலே வாகனம் செலுத்துவதற்கு தகுதி அற்றவர்களையும் தகுதி அற்ற வாகனங்களை யும் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டிருக்கும் வீதி ஒழுங்குக்குப் பொறுப்பானவர்களின் குற்றமா?

தவிர்க்கப்படக் கூடிய சாவுகளின் அடிப்படைக் காரணங்களை ஆராய முற்படும் பொழுது குழப்பமே மிஞ்சுகிறது. இவற்றை நிவர்த்தி செய்ய எங்கிருந்து ஆரம்பிப்பது எங்கே முடிப்பது? என்று தடுமாற நேர்கிறது. இவ்வாறான மரணங்கள் தொடரத்தான் பேரின்றனவா?

மனிதனது மூளையில் சிந்தனை ஓட்டமும் தொழிற்பாடும் வடிவமைக்கப்பட்டிருக்கும் விதம் உண்மையிலேயே விசித்திரமானது. மனித மனமானது பிறர் விடும் தவறுகளை துல்லியமாக அடையாளப்படுத்துவதில் நிபு ணத்துவம் மிக்கதாகவும், தான் விடும் தவ றுகளை புரிந்து கொள்ளும் அல்லது ஏற்றுக் கொள்ளும் வல்லமையில் பின் தங்கியதாக வுமே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இது இயற்கை பூமியில் தன்னை நிலை நிறுத்து வதற்கும், நல்ல முறையில் தப்பிப்பிழைப்பதற் கும் தான் செய்வது சரி என்று நிறுவ வேண் டிய தேவை இருக்கிறது. இதனை உயிர்களின் கூர்ப்பின் தக்கன பிழைத்தல் என்ற கோட் பாட்டின் மூலம் உறுதி செய்ய முடியும்.

இதனை மனித வாழ்க்கைக்கான போராட்ட யுத்தி என்றும் சொல்லலாம். மனிதனுக்கு இயற்கையாகவே அமைந்துவிட்ட இந்த தான் விடும் தவறுகளை தானே புரிந்து கொள்ளத் தெரியாத தன்மையே சுகாதார மேம்பாட் டுக்கும் மனித குல மேம்பாட்டுக்கும் பெரும் தடைக்கல்லாக இருக்கிறது.

மதக்கோட்பாடுகளும் மனித நாகரிக வளர்ச்சியும் மனிதனை சரியான நீதியான முறையிலே சிந்திக்க வேண்டியதன் அவசி யத்தை வலியுறுத்தி வருகின்றன. நாம் விடும் தவறுகளையே நாமே அடையாளப்படுத்தி எம்மை நாமே திருத்திக் கொள்ள முயலும் பயிற் சியானது உண்மையிலேயே மிகவும் கடின மானது. ஆனால் இதுதான் மனிதனை மனிதத் துவம் மிக்கவனாக மாற்றும் ஒரு முக்கியமான இயல்பாக அமையும். இந்த மனிதத்தத்துவ இயல்பு எம்மிலே வளர்ச்சி காணும் பொழுது பல முடிச்சுக்கள் தாமாகவே அவிழ்ந்துவிடும்.

அந்த வகையிலே நாம் சிந்திக்கும் பொழுது தவிர்க்கப்படக் கூடிய மரணங்களை தவிர்ப் பதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மை மாற்றிக் கொள்வதற்கு நிறைய இடம் இருக்கிறது என் பது புலப்படுகிறது. நாம் மற்றவர்களை திருத்த முயல்வது போலவே எம்மையும் சற்று மாற் றிக்கொள்ள முயல்வோம். அதன் மூலம் பல அநியாய மரணங்களை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தவிர்க்க முடியும்.

120 வருடங்களுக்கு முன் வாழ்ந்த யாரும் இன்று உயிருடன் இல்லை. இன்னும் 120 வரு டங்களின் பின் இன்று இருப்பவர்கள் யாரும் உயிருடன் இருக்கப்போவதுமில்லை. இது சர்வ நிச்சயமானது. இருந்த போதும் மனிதன் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழும் காலத்தை கூட்டுவதற்காகவே நாம் போராட வேண்டி இருக்கிறது. இந்தப் போராட்டத்தின் வெற்றிக்காக நாம் அனைவரும் சிந்திப்பதற் கும் செய்வதற்கும் நிறையவே இருக்கின்றன.

சி.சிவன்சுதன்
வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர்ப் பரம்பலை இல்லாதொழிக்க வேண்டும்

## பல்லவராயன் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பல்லவராயன்கட்டுக் கிராமத்தின் உவர்ப் பாதிப்பினை இல்லாது ஒழிக்க நட வடிக்கைகள் எடுக்க வேண்டும் என இக்கிராம மக் கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முழுமையாக உவரடைந்த கிராம அலுவலர் பிரிவாக பல்லவராயன் கட்டு காணப்படுகின்றது. 2000 ஆம் ஆண்டில் பல்லவராயன்கட்டுக் கிராமம் உவரடைய உள்ளது என்ற தகவல் வெளியிடப்பட்ட போதிலும் போர்ச்சூழலால் தகுந்த நடவடிக்கைகள் எடுக் கப்படாததன் காரணமாக தற்போது இக் கிரா மம் முழுமையாக உவ ரடைந்து மக்களும் இடம் பெயர்ந்து ள்ளனர்.

இந்நிலையில் பூநகரியின் கரியாலை நாகடுவான்குளம், பல்லவராயன்கட்டுக்குளம் ஆகிய குளங்களின் நீர் மழை காலங்களில் கடலினைச் சென் றடை கின்றது.

இந்நீரினை உவரடைந்த நிலப்பரப்பில் தேக்கி வைப்பதன் மூலம் உவர் நிலம் நன்னில மாக மாறுவதற்கான வாய்ப் புகள் உருவாகும்.

பூநகரியின் 10 ஆம் கட்டைக்கும் முக்கொம்பனுக்கும் இடையில் உவரடைந்த நிலப்பரப்புகளில் கடந்த காலங்களில் அமைத்த மண் அணைகளில் சவுக்கு மரக்கன்றுகளை நாட்டி மழை நீரினை சேமித்து உவர் நிலப் பரப்பினை நன்னிலமாக மாற்றுவதில் வெற்றி காணப்பட்டுள்ளன.

இதேபோன்று பல்லவராயன் கட்டுக் கிராமத்திலும் இரு குளங்களின் நீரினையும் உவர் நிலப் பரப்பில் சேமித்து வைப்பதன் மூலம் பல்லவராயன் கட்டுக் கிராமத்தின் உவர் நிலம் நன்னிலமாக மாறுவதற் கான வாய்ப்புகள் உள்ளன. இதற்கான நடவடிக்கையினை மாவட்டச் செய லகம் மேற்கொள்ள வேண்டும் என்பதே பல்லவராயன் கட்டு மக்களின் கோரிக்கையாகும். (நி-350)

# எல்லைக் கற்கள் தயார் அதிகாரிகள் அசமந்தம்



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான குளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றிற்கு எல்லைக் கற்கல் இட்டு அடையாளப்படுத்தும் நடவ டிக்கைகளுக்கு எல்லைக்கற்கள் கொள்வனவு செய்யப்பட்டு தயாராக உள்ள போதும் அவற்றினைக் கொண்டு குளங்களுக்கு எல்லையிடுவ தற்கு அதிகாரிகள் இல்லா திருப் பது கவலையளிக்கிறது என பொது மக்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

கிளிநொச்சியில் சில குளங்கள் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. இதில் கிளிநொச்சி குளம் அதன் பின் பகுதியில் பெருமள வுக்கு ஆக்கிரமிக்கப்பட்டு மதில்கள் அமைக்கப்பட்டு கட்டடங்களும் கட்டப்பட்டு விட்டன.

கனகாம்பிகைகுளம் அதன் பின்பகுதியில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 25 ஏக்கர் வரை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிது புதிதாக சிலர் மண் நிரப்பி குளங்களை ஆக்கிரமித்து வருகின்றனர். இது எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தம் உட்பட மிக மோசமான சுற்றுச் சூழல் பாதிப்பினை ஏற்படுத்தும். அருகிச் செல்லும் நிலத்தடி நீரையும் இல்லாது செய்துவிடும் எனவே இதனை கருத்தில் எடுத்து குளங்களை பாதுகாக்க வேண்டும்

அதற்கமைவாக குளங்களுக்கு எல்லையிடுதல் அவசியமாகும். வனவளத் திணைக்களம் தங்களின் காடுகளை பாதுகாக்க எல்லைக் கற்களை பதித்தது போன்று குளங்களுக்கும் எல்லைக் கற்களை பதிக்க வேண்டும். ஆனால் துரதிஸ்டவசமாக கற்கள் தயார் நிலையில் உள்ள போதும் திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருப்பது கவலைக்குரியது.

எனவே இனியாவது குளங்களை பாதுகாக்கும் அக்கறையுடன் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொது மக்கள் கோரியுள்ளனர்.(நி-316-350)


## QUALITY ASSURANCE EXECUTIVE
## IYAKKACHCHI FARM

We are part of ISF Group of companies established in 1977.

We have established an Organic Moringa Plantation with Modern Agricultural Practices to produce high-quality Organic Moringa Leaves to manufacture Moringa Powder, Moringa Leaf Flakes, Moringa powder Capsules & Tablets in a state of the art Food Processing Factory being commissioned in Iyakkachchi, Northern Sri Lanka.

We have an opening for a a dynamic self-motivated person to lead and efficiently manage the Quality Assurance team at the farm level and factory level.

Plantation is situated at Iyakachchi, close to the A9 Highway.

### QUALITY ASSUARANCE EXECUTIVE

**Scope of Duties:**

- Ability to lead the team towards assuring company Quality Policies will be an essential requirement.
- Oversees all aspect of organization's production quality functions.
- Develop new policies & standards relating to product quality.
- To be the main representative of the management to liaise with the key certification bodies and regulatory institutes.
- To be part of the team of New Product Development

**Qualifications:**

- Bachelor's Degree/ Diploma in Food Science/Technology.
- Strong understanding of BRCG standards and best practices.
- Ability to work independently and as part of the team
- Ability to speak in Tamil would be an added advantage

**Candidates resides within the Northern Province are preferred.**

All applications must reach us within 10 days of this advertisement.

QUICK ADS

Hyrin herbals

hrdlk@isfindustries.com
Chief Executive Officer
HERITAGE AGRI (PVT) LTD
Valaiththoddam, Iyakkachchi,
Palai, Kilinochchi

(c-2385)



## ASSISTANT ACCOUNTANT
## IYAKACHCHI FARM

We are an award winning group 45 years in industry with bi-national operations. we have established an organic Moringa plantation with a state of the art factory within the plantation located at Iyakkachi. with organic certification of our products recognized by EU, USAD, JAS.

State-of-the-art-factory is to convert Organically grown Moringa Leaves into value-added products such as Organic Whole Dried leaf, Organic Moringa Leaf Powder, Capsules, Tablets, Organic Moringa leaf flakes in sachets, and Moringa Tea with long shelf life.

Our plantation and manufacturing facility meets international standards.
The ideal candidate should be able to demonstrate high enthusiasm, energetic, self-motivation, result oriented to hold the position of Assistant Accountant to strengthen our team.

### ASSISTANT ACCOUNTANT

**Scope of Duties:**

- Preparation of financial records of the Profit centers.
- Account reconciliation.
- Capturing and monitoring the cost of planting and manufacturing
- Cost control
- Handling cash float, sales collection
- Costing and variance analysis and compliance to internal controls of individual units
- Ability to coordinate with other divisions, organize, and analyze financial information on a periodical basis

**Qualifications:**

- Part qualification in any recognized Accounting body in Sri Lanka.
- Age below 35 years
- Minimum 3-5 years of experience in Commercial sector with exposure to farm and manufacturing industry will be an added advantage
- Working ability with MS Office packages (Excel, Word)
- Report writing ability and communication skills to deal with intercompany personnel & financial institutions.
- Exposure to computerized Accounting Systems.
- To be a Target oriented
- Ability to meet deadlines

**Candidates resides within the Northern Province are preferred.**

All applications must reach us within 10 days of this advertisement

QUICK ADS

Hyrin herbals

hrdlk@isfindustries.com
Chief Executive Officer
HERITAGE AGRI (PVT) LTD
Valaiththoddam, Iyakkachchi,
Palai, Kilinochchi

(c-2384)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இந்துநெறி" வெளியீடு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இந்து மன்ற மாணவர்களால் கடந்த புதன்கிழமை அன்று "இந்து நெறி" யாழ்.பல் கலைக்கழகப் பொன்விழா சிறப்பு மலராக வெளியிடப் பட்டது. (நி-33)



இந்திய றோட்றி கழக அங்கத்துவர்களின் பங்கு பற்றலுடன் யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை மரக்கன்றுகள் நடப்பட்டன. தனவந்திரி செயற்றிட்டத்தின் தலைவர் றோட்டேரியன் தனசேகர் தலைமையில், சுன்னாகம் பாரிய றோட்டறி கழகம், இந்திய றோட்டறி கழக அங்கத்துவர்கள், க்றீன் லேயர் அமைப்பு மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். (படம்- சிவசாந்தன்)

# மத,இன அரசியலை நான் எப்போதும் செய்ததில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மதம் மற்றும் இனம் சார்ந்த அரசியலை தான் ஒருபோதும் செய்யவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் தாம் எப்போதும் அர்ப்பணிப் புடன் செயற்பட்டு வருவதாக வும் 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி எவரும் கையகப்படுத்தாத நாட்டை அனைத்து மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்காகவும் தாம் கையகப்படுத்தியதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். அம்பாறை பொத்துவில் ஜலால்தீன் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித் தார்.

தாம் இருந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க ஒற்றை ஆசனத் துடன் பாராளுமன்ற உறுப்பினராக முன்வந்ததாகவும் நாட்டைப் பொறுப்பேற்று மக்கள் அனுபவித்து வரும் அடக்குமுறைகளில் இருந்து அவர்களை மீட்க பாடுபட்டதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (நி)

# மன்னாரில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரிப்பு- அரச அதிபர் கனகேஸ்வரன்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை மற்றும் மக்கள் வேறு இடங்களுக்கு சென்று வருகின்றமையினால் கடந்த காலங்களை விட இம்முறை மன்னார் மாவட்டத்தில் டெங்கு பரவல் அதிகரித்த நிலையில் காணப்படுவதாகவும் மாவட்டத்தில் டெங்கு நுளம்பின் தாக்கத்தை கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகிற நிலையில் அவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந் துரையாடல் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன் போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

மன்னார் நகரம், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சில கிராமங்களில் டெங்கு நோய்ப்பரவல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேலும் கிராம மட்டத்தில் இருக்கும் சுகாதார மேம்பாட்டுக் குழு ஊடாக கிராமங்களில் டெங்கு நுளம்பின் பரவல் காணப்படும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு, அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு திணைக்களங்களிலும் டெங்கு தொடர்பில் உத்தியோகத்தர்கள் நிய மிக்கப்பட்டு அவர்கள் ஊடாக விடயங்கள். அலுவலகங்களில் டெங்கு நுளம்பின் பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொது சுகாதார பரிசோதர்கள், பொலிஸார், கடற்படை மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-285)








தமிழ் ஆசிரியை ஜீவரஞ்சினி விவேகானந்தராசா ஓராண்டு நினைவு ஞாபகார்த்தமாக மாணவர் படைப்பிலக்கிய, திறந்த போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி திறன்விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது. (படம் -கிருஷ்ணகுமார்)



மன்னார் கள்ளியடி அருள்மிகு ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக பெருவிழா கடந்த வியாழக்கிழமை பக்தர் களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடை பெற்றது. கும்பாபிஷேக பெருவிழாவை தொடர்ந்து 10 நாட்களுக்கு மண்டல அபிஷேகங்கள் நடைபெற்று பன்னிரெண்டாம் நாள் 108 சங்காபிஷேகம் இடம் பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (படம்- யோசப்நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை எண்ணியே வருந்தி தளர்ந்து விடாமல் நல்லவைகளை செய்ய எழுந்து நடைபோடுவதே சிறப்பம்சமாகும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாவை சேனாதிராஜாவின் பார்வைக்காக ஒரு மடல்

ஒரு காட்டு வழிப் பாதையில் உள்ள மரமொன்றின் கீழ் சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர் அமர்ந்திருக்கின்றார். அந்தப் பாதையால் ஒருவர் பதறியபடி ஓடி வருகிறார். சுவாமிகளைக் கண்டதும் அவரிடம் தஞ்சமடைகிறார்.

எதற்காக ஓடி வருகிறீர்கள் என அந்த நபரிடம் சுவாமிகள் வினவுகிறார்.

அதற்கு அந்த ஆள்; சுவாமி அதோ! அந்தக் குரங்குகள் என்னைத் துரத்திவருகின்றன. அதுதான் ஓடுகிறேன் என்றார்.

நீங்கள் ஓடுவதால் குரங்குகள் துரத்துவதை நிறுத்திவிட்டனவா? சுவாமிகள் கேட்டார்.

இல்லை சுவாமி! குரங்குகள் தொடர்ந்து என்னைத் துரத்துகின்றன என்றார் அந்த ஆள்.

அப்படியானால், ஏன் ஓட வேண்டும். குரங்குகள் துரத்துவதை நிறுத்தியிருந்தால், நீங்கள் ஓடுவதில் அர்த்தம் உண்டு. ஆனால் அவைதான் துரத்துவதை நிறுத்தவில்லையே அப்படியானால் ஓடுவதால் பயனில்லையல்லவா என்றார் பரமஹம்சர்.

சுவாமி! நான் என்ன செய்ய வேண்டும். அந்த நபர் வினவினார்.

மகனே! ஓடுவதை நிறுத்திவிட்டு, திரும்பி நின்று துரத்துகின்ற குரங்குகளை முறைத்துப் பார் என்றார் சுவாமி.

அப்போது குரங்குகள் நெருங்கி வருகின்றன. சுவாமிகளின் ஆலோசனைப்படி இப்போது அந்த நபர் ஓடவில்லை.

மாறாக, வீரத்தைத் தன்னுள் வரவழைத்துக் கொண்டார்.

சடுதியாகத் திரும்பினார். குரங்குகளை முறைத்துப் பார்த்தார். குரங்குகள் ஒரு கணம் திகைத்து நின்றன. அவ்வளவுதான் மறுகணத்தில் அந்தக் குரங்குகள் திரும்பி ஓட்டம் பிடித்தன.

இந்தக் கதையின் பொருளை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்.

அது சரி, இந்தக் கதை இப்போது எதற்கானது என நீங்கள் வினவலாம். அவ்வாறு வினவினால், எல்லாம் காரணத்தோடுதான்.

ஆம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அபரிதமான துணிச்சலோடு செயலாற்ற வேண்டிய நேரம் இது.

அவர் மௌனமாக இருக்கின்ற ஒவ்வொரு கணமும் தமிழரசுக் கட்சியின் ஆயுளுக்கு ஆபத்து என்பது உரைப்பட வேண்டும்.

உண்மை. நீங்கள் உங்கள் கையில் எடுக்கின்ற தலைமைத்துவத்தின் ஒட்டுமொத்த அதிகாரத்தால் மட்டுமே, இலங்கைத் தமிழரசுக் கட்சியைக் காப்பாற்ற முடியும்.

ஆம், மதிப்புக்குரிய மாவை சேனாதிராஜா அவர்களே! இனி உங்களால் அரசியலில் பெரிதாக எதனையும் சாதித்துவிட முடியாது.

ஆனால் ஒரு பெரும் சந்தர்ப்பத்தை இயற்கை இப்போது உங்களிடம் தந்துள்ளது. அது இலங்கைத் தமிழரசுக் கட்சியைக் காப்பாற்றுகின்ற மாபெரும் வரலாற்றுப் பணியாகும். அதனை நீங்கள் செய்தாக வேண்டும்.

உறுதியாக இருங்கள். கட்சியின் நிலைப்பாட்டை மக்களிடம் முன்வையுங்கள். அரசியல் சலுகைகளைத் தூக்கி எறியுங்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஆபத்து வந்துற்றபோது அதனை முறியடித்து கட்சி காப்பாற்றியவர் மாவை சேனாதிராஜா என்று தமிழ் மக்கள் கூறுகின்ற அளவுக்கு, உங்கள் தலைமைத்துவத்தை நிரூபியுங்கள். அதுபோதும்.

ஜனாதிபதித் தேர்தலில்

## மரவாக்குப் பெட்டிக்குப் பதில் கடதாசி மட்டையிலான பெட்டிகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் பாரம்பரிய மரப்பெட்டிகளுக்குப் பதிலாக கடதாசியிலான அட்டைப் பெட்டிகளால் செய்யப்பட்ட வாக்குப்பெட்டிகள் மட்டுமே பயன்படுத்தப்படும். அவற்றை தயாரிக்கும் பணியில் தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வாக்குப்பெட்டிகள் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளில் தயாரிக்கப்பட்டு வாக்குச் சாவடிகளுக்கு அனுப்பப்படுவது வழமை.

கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கடதாசி மட்டைப் பெட்டிகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டன. 2020 பொதுத் தேர்தலில் மரம் மற்றும் கடதாசி மட்டையிலான பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன.

எனினும் இம்முறை கடதாசி மட்டைப் பெட்டிகளை மட்டுமே பயன்படுத்துவோம் எனத் தெரிவித்தார். (ந-7)

## பச்சிலைப்பள்ளி பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கி வைப்பு

(அக்கராயன்)

கமத்தொழில் அமைச்சின் கிராமியப் பொருளாதார பிரிவினால் நடைமுறைப்படுகின்ற வதிவிடங்களை அண்டிய ஆடு வளர்க்கும் திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கு 21 ஆடுகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் த. ஜெயசீலன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கமநல காப்புறுதி வெளிக்கள உத்தியோகத்தர், கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கிவைத்தனர். (நி-350)

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெறும்.

மாலை 6.45 - 7.10 மணி வரை இடம்பெறவுள்ள இசையரங்கில் பாட்டு- புஸ்பநாதன் லதுர்ஷன், வயலின்- கே.வேலதீபன், மிருதங்கம்- ப.விக்னேஸ்வரன், கஞ்சிரா- கார்த்திகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

7.15 - 8.05 மணிவரை உடுவில் நாட்டிய கலாகேந்திராவின் நடன அரங்கு நிகழ்வில் நட்டுவாங்கம்- துஷ்யந்தி சுகுணன், பாட்டு- அ.அமிர்தலோஜனன், வயலின்- கே.வேலதீபன், மிருதங்கம்- ந.சிவசுந்தரசர்மா, கீபோட்- ச.ரஜீவன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி)




### கந்தா கருணை தந்திடுவாய்

ஆறுபடை வீடு கொண்ட முருகா-வேலவா!
வீறு நடை போட்டிங்கு வா முருகா
நம் நலன் காக்க அருள் தருவாய்
நல்லூரானே!
கந்தன் கருணை காட்டிடுவாய்
காலமெல்லாம் நாம் மகிழ்வுற
மனம் கொண்டு எம் முன் வருவாயே
தினம் உன்னைப் போற்றி வணங்குகிறேன்
அலங்காரக்கந்தா உனைக்காண
அங்கலாய்க்கின்றேன் உன் அருள்
வேண்டி மனமுருகிப் பாடுகிறேன்
வேல்முருகா வேல்முருகா
என்முன் காட்சி தந்து கருணை தருவாய்

வ.காந்திமதிநாதன்

### நல்லைக் கந்தவேளே!

பாட்டியா மவ்வையின் பல்துறைப் புலமையை
பாருக் குணர்த்தவெண்ணி
பாட்டாலே சோதனை செய்தனவை யாவுமே
பட்டறிவு வித்தகங்கள்
கேட்டாலே யென்றுமே தித்திக்கும் முத்தாகி
கீர்த்தியாய் தோன்றுஞ்ஞானம்
காட்டவே வைத்தவன் காசினியி லுய்த்தவன்
கலைநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

## பொது வேட்பாளரை நிறுத்தியதால் தென்பகுதியில் கடும் அழுத்தம்

### அதனாலேயே பேச்சுக்கு அழைப்பு - சுரேன்

தமிழ்ப் பொது வேட்பாளரால் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களுக்கு கடும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார்கள். நாம் அவர்களுடன் பேசுவோம் எனத் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப்பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார்.

வவுனியா மூன்று முறிப்பு பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம் பெற்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மத்தியகுழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் சம்மந்தமான விடயங்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. எமது பொது வேட்பாளரது பிரசார நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றியும், பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டதால் தென்பகுதியில் ஏற்படுகின்ற அழுத்தங்கள் காரணமாக தென்பகுதியின் பிரதான வேட்பாளர்களிடம் இருந்து தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளுக்கான அழைப்புக்களும், கோரிக்கைகளும் வந்தவண்ணமுள்ளன.

பேச்சுவார்த்தை சம்மந்தமான விடயங்களை எப்படி நாங்கள் கையாள்வது என்பது பற்றியும் ஆராயப்பட்டது. இது மிகவும் ஆக்க பூர்வமான சந்திப்பாக இடம்பெற்றது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரையும், அதே நேரம் பேச்சுவார்த்தைகளையும் எவ்வாறு கையாள்வது பற்றியதான அனுமதியையும், ஆலோசனைகளையும் மத்திய குழு வழங்கியுள்ளது.

அத்துடன், பொது வேட்பாளரை நாம் கைவிடுவதற்கான சாத்தியம் இல்லை. ஆனால் எமது மக்கள் எதற்காகப் பொது வேட்பாளரை நிறுத்தினார்களோ அல்லது எந்த விடயங்களை நிறைவேற்ற வேண்டும் என எந்த நோக்கத்திற்காக பொது வேட்பாளரை நிறுத்தினமோ அந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் பிரதான வேட்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டியது எமது கடமை. அந்த விடயத்தை எப்படிக் கையாள வேண்டும் என முடிவு எடுத்துள்ளோம்.

இந்தக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தம் கருணாகரன் உள்ளிட்ட மத்திய குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ளனர். (ந-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை**

1997. இந்து. பரணி. FINANCIAL ANALYST, பூர்வீகம்-வண்ணார்பண்ணை. வதியுமிடம்-New Zealand மணமகன் பதிவு இல: 10941.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
70% விலைக்கழிவு 30.08.2024 வரை மட்டுமே (1355)
அழையுங்கள் 076 664 9401

**மணமகள் தேவை**

1995. இந்து. அஸ்வினி TEACHER, பூர்வீகம்-மட்டக்களப்பு. வதியுமிடம்-திருகோணமலை மணமகன் பதிவு இல: 10927.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
70% விலைக்கழிவு 30.08.2024 வரை மட்டுமே (1355)
அழையுங்கள் 076 664 9401

**மணமகன் தேவை**

1991. இந்து. சித்திரை. PSYCHOLOGIST, பூர்வீகம்-யாழ்ப்பாணம். வதியுமிடம்-கொழும்பு மணமகள் பதிவு இல: 10884.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
70% விலைக்கழிவு 30.08.2024 வரை மட்டுமே (1355)
அழையுங்கள் 076 664 9401

**மணமகன் தேவை**

1997.இந்து விசாகம் SOFTWARE ENGINEER, பூர்வீகம்-கொடிகாமம், வதியுமிடம்-சாவகச்சேரி மணமகள் பதிவு இல: 10923.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
70% விலைக்கழிவு 30.08.2024 வரை மட்டுமே (1355)
அழையுங்கள் 076 664 9401

# ருக்மன் சேனாநாயக்க காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ்.சேனாநாயக்கவின் பேரனும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரவை அமைச்சருமான ருக்மன் சேனாநாயக்க 76 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். (நி)

**நாகபூஷணி திருமண சேவை**

**எம்மிடம் பல்லாயிரக்கணக்கில் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.** (1769)

10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி , யாழ்ப்பாணம்.
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

## விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு, முல்லைத்தீவு.

## பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றிடமான தற்காலிக பொதுமுகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்தி அத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிட்டு எதிர்வரும் 15.09.2024ஆம் திகதிக்கு முன்னராக தலைவர், விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

- வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளர்களிற்கு வயதெல்லை பொருந்தாது)
- முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் சங்கம் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
- அத்துடன் எவரேனும் ஒருவர் கூட்டுறவு சங்கத்தில் சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ளார் என அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரிய வருமாயின் பதவி இழப்பதற்கு அது ஒரு காரணமாக அமையும்.
- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருப இலக்கங்கள் 04/2017(1), 04/2018(1)இற்கு அமைய வாழ்க்கைச் செலவுப்படியும் விசேட செயலாற்றுகைப் படியும் வழங்கப்படும்.
- இப்பதவிக்கு விண்ணப்பங்கள் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தில் பிணை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

திரு.புலேந்திரன் யசோதரன்
தலைவர்,
விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு.
திகதி :- 25.08.2024

**பதவி :- பொதுமுகாமையாளர் (தற்காலிகம்)**
சம்பள குறியீட்டு இல :- 101/08
சம்பள அளவுத்திட்டம் :- 20665.00 - 260 X 10 - 280 X 10 - 26065.00
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபம் 01/2022இற்கு, 04/2024இற்கு அமைய மாதாந்தம் ரூபா 5000/=, ரூபா 5000/= (மொத்தம் ரூபா 10,000.00) மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு 2024.02.15ஆம் திகதிய கடிதத்துக்கமைய மாதாந்தம் ரூபா 5000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/ அதற்குச் சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.
இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி. **அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகால அனுபவம்.

**தலைவர்,**
**விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**விசுவமடு.** (சி-1040)

## வரையுள்ள விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

## பதிவு இல:- PA-56 12.09.1972

## நவீன அரிசியாலை குத்தகை அடிப்படையில் வழங்குதல்

எமது சங்கத்திற்கு வள்ளுவர்புரம் விசுவமடுவில் அமைந்துள்ள அரிசி ஆலை தொழிற்சாலையும் அதனுடன் இணைந்த இரண்டு நெற்களஞ்சியக் கட்டடம், சொத்துக்கள் என்பவற்றையும் மூன்று வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் நிபந்தனைகள் அடிப்படையின் கீழ் தகுதியான ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. குத்தகை முற்பணமாக ஆகக் குறைந்த தொகையாக ரூபா அறுபத்தைந்து இலட்சம் (ரூபா 6.5மில்லியன்) எதிர்பார்க்கப்படுகின்றது.
02. மாதக் குத்தகையாக ஆகக் குறைந்தது ரூபா மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 350,000.00) எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னராக விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாதாந்தம் குத்தகைப் பணம் வழங்கப்பட வேண்டும்.
03. குத்தகைக்கு கொள்பவர் வேறு நபர்களுக்கு /நிறுவனங்களுக்கு உப ஒப்பந்தம் மூலமோ அல்லது வேறு வகையிலோ கை மாற்ற முடியாது.
04. குத்தகை ஒப்பந்தம் முடிவுறுத்தல் தொடர்பிலும் அரிசி ஆலைத் தொழிற்சாலை தொடர்பான திருத்தம் பராமரிப்பு ஏனைய விடயங்கள் தொடர்பிலும் தெளிவான எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்று இரு தரப்பாலும் கைச்சாத்திடப்படும்.
05. அரிசி ஆலையை வாடகைக்குப் பெற்றுக்கொள்பவர் , சங்கத்தின் அனுமதியின்றி காணி கட்டடத்தில் மேலதிக வேலைத்திட்டங்களாக நிரந்தர இணைப்புக்கள் எதனையும் செய்ய முடியாது எனவும் அவ்வாறு செய்யின் சங்கத்தின் எழுத்து மூல அனுமதியுடன் மட்டுமே செய்யும் ஏற்பாடு.
06. அரிசியாலையை வாடகைக்குப் பெற்றுக்கொள்பவர் அங்குள்ள தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் என்பவற்றைப் பொறுப்பேற்கும் போது பட்டியலிட்டுப் பெற்றுக்கொள்வதுடன் ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் அதே பொருட்களை இயங்குநிலையில் மீளக் கையளிப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்று ஏற்பாடுகள்.
07. ஒப்பந்த காலத்தில் அரிசி ஆலை வளாகத்தில் சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக்கூடிய செயற்பாடுகள் அல்லது சமூக விரோத செயற்பாடுகள் இல்லாத வகையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை வாடகைக்குப் பெற்றுக் கொள்பவருக்கு சங்கம் வலியுறுத்த வேண்டும்.
08. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்துவ பணியாளர்களின் பொருளாதார நலவுருத்துக்கள் பாதிக்கப்படாத வகையிலும் கிடைக்கப் பெறுவதையும் உயர்வான மட்டத்திலும் பேணப்படுவதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் தங்களின் தெளிவான இயலுமையை பூரணமாக வெளிப்படுத்தி எதிர்வரும் 25.09.2024ஆம் திகதி மதியம் 12 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி விடயம் தொடர்பில் விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர் சபையின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதும் ஆகும்.

**குறிப்பு**

01. இத் தொழிற்சாலை உடன் செயற்படுத்தக் கூடிய நிலையில் காணப்படவில்லை. இந்நிலையில் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளும் திறத்தவரே அரிசி ஆலை தொழிற்சாலையை செயற்படுநிலைக்கு மாற்றுவதற்கு ஏதுவான விடயங்களை கையாள வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.
02. குறித்த தொழிற்சாலையை நேரடியாக சென்று பார்வையிட விரும்பின் தலைவர் அல்லது பொதுமுகாமையாளருடன் கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
03. மூன்று வருடங்களின் பின்னர் இருதரப்பினர் சம்மதத்துடன் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படலாம்

**தலைவர்,**
**விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**விசுவமடு,**
**முல்லைத்தீவு.**
**தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் - 0212061813, 0773972732** (சி-1042)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றவாளிகள்...

மாற்றம் தேவை என நினைப்பதில் மாத்திரம் பயனில்லை. மாற்றத்திற்கான வாய்ப்பு வர வேண்டும். இப்போது அந்த பலமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. வலிமையான மாற்றத்தை நோக்கிச் செல்ல வலுவான சக்தி தேவை. எனவே அந்த அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி கொடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் மாற்றத்தை ஏற்படுத்தப் பல்வேறு தலைவர்களைக் கொண்டு வந்தார்கள். ஆனால் யாரும் அந்த மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கும். அதனால் கடந்த 76 வருடங்களாக மக்களின் நம்பிக்கைகள் அனைத்தும் தகர்ந்துபோனது.

ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் ஒரு தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்தன, அவை வளம் பெற்றன. உலக சந்தை நிலைமாறிவரும் போது நவீன தொழில்நுட்பம் நாட்டுக்குக் கொண்டுவரப்படவில்லை. அப்போதிருந்தது எங்களிடம் தேயிலை, தேங்காய், றப்பர் மட்டுமே.

சந்திரிகா, மகிந்த, கோட்டாபய மற்றும் மைத்திரிபால ஆகிய முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரும் குற்றவாளிகள் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவும் அடிப்படை மனித உரிமைகளை மீறிய குற்றவாளியாவார்.

இவ்வாறிருக்க ஏனைய நாடுகள் எமது தலைவர்களை எப்படி ஏற்றுக் கொள்ளும்? நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் சட்டத்தை மதிப்பவர்களாக இருக்க வேண்டும். இலங்கை குற்றவாளிகளால் ஆளப்படும் நாடாகவே உலகம் பார்க்கிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## உள்ளூராட்சித்...

எனினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்த சிலர் தற்போது உயிரிழந்துள்ளனர். சில வேட்பாளர்கள் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு சென்றுள்ளதாகவும், பல வேட்பாளர்கள் அரசியலில் இருந்து விலகியுள்ளனர்.

எனவே இது குறித்து கலந்துரையாடல்களின் பின் முடிவு எட்டப்படும் என்றார். (ந-7)

## இனவாதச்...

குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்துரைத்த அவர்,

நாடு வங்குரோத்து அடைந்து 220 இலட்சம் மக்கள் தற்போது கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர்.

தொடர்ந்தும் இனவாதத்துடன் செயற்படாமல் அனைவரும் நாட்டை கட்டி எழுப்புவதற்கு ஒற்றுமையோடு இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறான பிரிவினைகளோடு முன்னோக்கிச் செல்ல முடியாது.

ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சியாளர்கள் இந்த நாட்டு மக்கள் குறித்து சிந்திப்பதில்லை. நாம் ஆட்சிக்கு வந்தால், புதிய பொருளாதார நோக்குடன் நாட்டை கட்டி எழுப்புவோம்.

அனைவருக்கும் அபிவிருத்தியின் பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில் சமூக சந்தை பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலம், மீண்டும் நாட்டைக் கட்டி எழுப்ப முடியும் எனத் தெரிவித்தார். (ந-7)

## இயக்கச்சியில்...

நிலையில் பேருந்தை எடுக்க முற்பட்ட போது, குறித்த நபர் தடக்கி வீழ்ந்த போது விபத்து நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்துத் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ந-7,316)

## 139 கட்டடங்கள்...

ஆணைக்குழு 2011 - 2021 வரை தனியார் கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வந்தமையால் 15.35 மில்லியன் ரூபாய் வாடகையாகச் செலுத்தப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளளது. (ந-7)

## நிறைவேற்றத்...

தற்போது நடைமுறையிலுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் நாட்டின் எதிர்காலம் மிகவும் மோசமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அப்படியே நிறைவேற்றுவது அவசியம் [illegible] முடியாது.

எனவே செப்ரெம்பர் 21ஆம் திகதி நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பிரசாரத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். நான் ஜனாதிபதியாக வெற்றி பெற்றதும் அந்த மாற்றத்தைச் செய்வேன் என எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

"சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை இப்போது கொண்டிருக்கும் உடன்படிக்கை பொருளாதார வளர்ச்சி குறித்து கவனம் செலுத்தவில்லை. அரசு கடன்பேண்தகு தன்மை குறித்து மாத்திரம் கவனம் செலுத்தக்கூடாது. வர்த்தகத்தின் ஏனைய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும்."

"இலங்கை அரசும் சர்வதேச நாணய நிதியமும் 2029ஆம் ஆண்டில் 3.1 பொருளாதார வளர்ச்சி என்பதையே பொதுக்கொள்கையாகக் கொண்டுள்ளன. இது போதுமானதல்ல. 2029 ஆம் ஆண்டில் உலகில் 3.1 வீத பொருளாதார வளர்ச்சி உண்மையில் மந்த நிலையே. ஆதலால், ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மாற்றியமைக்கும்" என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ந-7)

## ஆட்...

மடம் நோக்கி கே.கே.எஸ் வீதியால் பயணித்த குறித்த முச்சக்கர வண்டியில் தாயும், 2 வயது மகனும் பயணத்தை மேற்கொண்டனர்.

இதன்போது கிளை வீதி ஒன்றுக்கு திருப்ப முற்பட்டபோது முச்சக்கரவண்டி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது படுகாயமடைந்த தாயும், மகனும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளான். (ந-7)

## பன்றி...

ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த நாகமுத்து லட்சுமி (வயது-80) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண்மணி நேற்று முன்தினம் மாலை வீட்டுக்கு வெளியே வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார். இதன்போது அங்கிருந்த வளர்ப்புப் பன்றி ஒன்று அவரைக் கொடூரமாகத் தாக்கியது.

இதனால் படுகாயமடைந்த குறித்த வயோதிபப் பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-7,60,33)

## இந்திய...

களும் மீன்பிடிக்கப் பயன்படுத்திய படகுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.(நி-33)


மஹஜன சம்பத
திகதி 2024.08.24
சீட்டிழுப்பு இலக்கம் 5575
U 6 1 1 2 5 5
அத சம்பத U 1 2 5 5
சீட்டிழுப்பு இலக்கம் 150

தன நிதானய
திகதி - 2024.08.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1605
Y 24 47 53 74 Y
63426

மெகா பவர்
திகதி 24/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1923
W 11 09 20 25 28
60730

லக்கி 7 VIP
திகதி 2024.08.24
சீட்டிழுப்பு இலக்கம் 0401
Y 9 4 5 5 7 0 Y

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3817
சீட்டிழுப்பு திகதி 24.08.2024
S 35 50 65 69
S 20860
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.24
சீட்டிழுப்பு இலக்கம் 0884
துலாம் 12 19 56 61 துலாம்
60011 21

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.08.2024 வெற்றி வாரம் 283 வர்ணம் நீலம்
T 2 1 1 7 8 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,679,188.00
69453
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2549 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 24.08.2024 தினம் சனிக்கிழமை
30 37 46 71 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,734,527.20
DLB

சனிதா
திகதி 2024.08.24 வெற்றி வாரம் 4710
39 50 59 70 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,225,100.40
39165
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4261 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.24 தினம் சனிக்கிழமை
07 17 55 61 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,649,191.60
117815
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 08 34 53 55 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 540,840,235.00
1725 சிவப்பு 24.08.2024 சனிக்கிழமை
DLB

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2375
சீட்டிழுப்பு திகதி : 2024.08.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,277,324.00
ADA KOTIPATHI
07 38 41 57 D
298082
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியன் விசா சேவைகள்

யாழ்ப்பாணம் - சென்னை
விமானப் பயணச் சீட்டுக்கள்
அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**APEX TRAVELS**

0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (285)

## மொத்தக் கொள்வனவு

400g அங்கர் பால்மா மற்றும் யோக்கட் மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்



Happy Super market
உரும்பிராய்
077 773 0900 (285)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
075 033 6759 (216)

## வாடகைக்கு

இணுவில் பகுதி
வீடு (Annex)
வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 492 5974 (1752)

## வீடு வாடகைக்கு தேவை

திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் அண்மித்த இடங்களில் வீடு வாடகைக்கு வேண்டும்.

தொடர்புகளுக்கு:
077 500 0167 (1751)

## A/L இணைந்த கணிதம்

A/L 2025, A/L 2026 மாண வர்களுக்கான பிரத்தியேக வகுப் புக்கள், வீட்டிற்கு வந்து கற்பிக்கப் படும்.அடிப்படையான விளக்கங்க ளுடன் தெளிவாகக் கற்பிக்கப் படும். (1782)

074 111 0790

## V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1045)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள YAMAHA MATE (யமகா மேற்) மோட்டார் சைக்கிள், நல்ல இன செவ்விளநீர் தென்னங்கன்றும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 656 6508 (1771)

## விற்பனைக்கு

சொக்கட்டான் பந்தல், வளைவு பந்தல், சிறகு பந்தல், மணவறைகள், கதிரை, மேசைகள் மற்றும் சமையல் உபகரணங்கள், வுபே செற்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு. (1762)

தொடர்புகளுக்கு: 077 739 6171

## Care Giver - பராமரிப்பாளர்

**கனடா, அமெரிக்கா, ஜேர்மனி**
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**CIMS College**
49A, Chapel Street,Jaffna.
(C-1045)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## காணி விற்பனைக்கு

உசன் தெற்கில் 22 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்கு உண்டு. நான்கு பக்கமும் முட்கம்பி வேலி. பயன்தரு மரங்களுடன்.

பரப்பு - 4 இலட்சம்

075 953 4353 (1780)

## வேலையாட்கள் தேவை

மீசாலையில் இயங்கும் SVIS Pharmacy, SVIS Distributors (PVT) Ltd க்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

- மருந்தக உதவியாளர் (அனுபவம் உள்ளவர்கள்)
- கணக்கீட்டு உதவியாளர்

தொடர்புகளுக்கு: 077 211 0996 (1776)

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹார்ட்வெயர் நிறுவனத்துக்கு வேலையாட்கள் தேவை.

- விற்பனையாளர்
- Welding வேலை தெரிந்தவர்

தொடர்புகளுக்கு:
021 228 3663, 076 000 4903 (C-1044)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் A9 வீதியை முகப்பாகக் கொண்டு அமைந்துள்ள மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. சாவகச்சேரி பஸ் தரிப்பிடத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பக்கமாக கண்டி வீதியில் அமைந்துள்ளது. (C-1043)

076 430 1811

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 240 நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**




- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீர் ஊற்று, 20 அடிப் பாதை
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna கல்லூரி 1 Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி 500m தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150,000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

குரு (1754)
077 294 1521
077 288 0152
076 755 8606

## தேவை

எலக்ரோனிக் ஷோரூம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண் தேவை.
யாழ் நகர்
தொடர்புகளுக்கு:
077 1999 220 (1785)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகருக்கு அருகில் பழைய பொலிஸ் நிலைய வீதியில் பயன்தரு மரங்களுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (1775)

077 668 6039

## Home Based medical Care

உங்கள் வீட்டிலேயே மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொள்ள அழையுங்கள்



077 495 5606

Be treated at your home
For More Details whatsapp (284)

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 235/= |
| 1 Kg Prima கோதுமை மா | - 159/= |
| 1 Kg றவை | - 282/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 269/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= |
| 1 Kg நீட்டல் பச்சை | - 205/= |
| 1 Kg பொன்னி அரிசி | - 274/= |
| 1Kg கீரி சம்பா | - 240/= |
| 1Kg சம்பா | - 228/= |
| 1Kg செத்தல் மிளகாய் | - 740/= |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 620/= |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= |
| 01 Ocean மீன் ரின் | - 360/= |
| 180 ml சன்சில்க் சம்போ | - 430/= |
| 400 g சஸ்ரயன் | - 3390/= ~~3900/=~~ |
| 400 g அங்கர் | - 1000/= |

400g Anchor
1000/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (285)

Happy Supermarket
0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.